
பாலர்

இந்து தேச சரித்திரம்



மங்கள நூலகம்
சென்னை-34

பாலர் இந்துதேச சரித்திரம்

நான்காம் வகுப்புக்குரியது

சென்னை மாவட்டம்

[புதிய பாடத்திட்டப்படி எழுதப்பெற்றது]

T. K. வெங்கடராமன், M.A., L.T.
(ஓய்வு பெற்ற சரித்திரப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை)

&

Rev. Fr. P. ஞானிநாதன், D.D, Ph.L., M.A., B.T.
(முன்னாள் தலைமையாசிரியர், சிறிய மலர்
உயர்நிலைப் பள்ளி, கும்பகோணம்)

(Approved by the Madras Text-Book Committee
for Class Use, Vide—Fort St. George Gazette
dated 18—5—1966, page 43.)

மங்கள நூலகம்
பிரசுரகர்த்தர்கள்
நுங்கம்பாக்கம் : : சென்னை-34

 1965 [விலை ரூ. 1·00

முதற் பதிப்பு : நவம்பர், 1965
திருத்திய பதிப்பு : ஏப்ரல், 1966
மறு பதிப்பு : 1966, 1971

We gratefully acknowledge the permission granted to us for reproducing in this book some of their photographs and maps by the director of Information and Publicity Department, Madras, M/S. M. Seshachalam & Co., Madras and Sri T. S. Pattabhiraman, M.A., B.L., M.P.

External boundary of India on the Post-Independence maps used in this book has been verified and certified by the Director, Map Publication, Survey of India vide TB 5048/62-A-3/51 dated 20th July, 1963.

[இந்நூல் 10·9 கிலோ கிராம், 51×76 ச. செ. மீ. வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டுள்ளது.]

பாலா பிரிண்டர்ஸ், சென்னை-34

முன்னுரை

பாரத சமுதாயம் பண்புள்ள சமுதாயம்; இந்திய சமுதாயம் ஏற்றமுள்ள சமுதாயம் எனப் புகழ்ப் பெறும் பொன்னெளிர் பாரதத் திருநாடாம் நம் நாட்டின் வருங்காலப் பெருமை மாணவ மணிகளாகிய உங்கள் செயலைப் பொறுத்துள்ளது. 'பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானினும் நனி சிறந்தன' அல்லவா? ஆதலின் பிறந்த பொன்னாட்டின் வரலாற்றை யாவரும் உணர்வது பெரும் பயன் விளைக்கக்கூடும். இதற்குத் தக அரசினர் அண்மையில் வெளியிட்டுள்ள பாடத் திட்டத்தில் கண்டுள்ளபடி, மதங்களின் மாண்புகள், மாபெரும் சாம்ராஜ்யங்களைப் பற்றிய விவரங்கள், ஆங்கிலேயராதிக்கமும் விடுதலையும் பற்றிய செய்திகள் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவைகளை நன்கு கற்றபின், நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை என உணர்ந்து செயல் படுவீர்களாக!

பதிப்பகத்தார்

பொருளடக்கம்

சென்னை மாவட்டம்

1. நமது நாடு


நமது தேசத்தை இந்தியா என்று வழங்குவர். ஆனால் ஆதிமுதல் இந்தப் பெயர் வழங்கவில்லை. பரதன் என்பவன் இத்தேசம் முழுவதையும் ஆண்டதனால் இந்தத் தேசத்துக்குப் **பரதகண்டம்** என்றொரு பெயர் உண்டு. பழைய நாட்களில் பாரசீகர், கிரேக்கர் போன்ற அயல் நாட்டினர் வடமேற்கு இந்தியாவில் வலுவில் நுழைந்தனர். அங்குள்ள **சிந்து** என்னும் பெயரே அவர்கள் மொழியில் இந்து எனத் திரிபு அடைந்து இத்தேசத்தின் பெயராயிற்று. இப்பொழுது உலகம் முழுவதும் நம் தேசத்தை இந்தியா வென்றே

அழைப்பதால் அந்தப் பெயரே இத்தேசத்துக்கு நிலைத்துவிட்டது. பழங் காலத்தில், இந்தியா இப்பொழுது ஆப்கானிஸ்தானம் என்று சொல்லப்படும் தேசத்தையும் உட்கொண்டதாயிருந்தது.

புதிய அரசியல் திட்டத்தின்படி இத்தேசத்திற்குப் பாரத் என்று மறு பெயரும் இடப்பட்டிருக்கிறது.

1947ஆம் ஆண்டு வடமேற்கு மாகாணங்களான சிந்து, பஸ்சிஸ்தானம், மேற்குப் பஞ்சாப், வடமேற்கு எல்லை மாகாணங்கள் இவைகளும், கிழக்கேயுள்ள கிழக்கு வங்காளமும் சேர்ந்து பாகிஸ்தானம் என்னும் ஒரு தனி நாடாகி இந்தியாவினின்றும் பிரிந்துள்ளது.

பாகிஸ்தானத்தில் முஸ்லீம்கள் பெருவாரியாக வாழ்கின்றனர். இந்தியாவில் இந்துக்கள் பெருவாரியாவர். ஒரு தேசத்தில் ஏகபோகமாக ஒரு மதத்தினரே வாழ்தல் என்பது முடியாத செயல். இந்தியாவில் பல கோடி முஸ்லீம்கள் இருக்கின்றனர். நம்அரசாங்கம் மதவேற்றுமை பாராட்டாத அரசாங்கமாகையால், இங்குள்ள முஸ்லீம்கள் பிற மதத்தினருடன் சரிசமமாக


இந்தியா
இராச்சியப்பிரிவுகள்
சிக்கிம், பூட்டான் தனிஉடன்படிக்கையால் இந்தியாவுடன் இணைந்துள்ளன.
ஆப்கானிஸ்தானம்
ஜம்மு காஷ்மீர்
ஸ்ரீநகர்
மே.பாகிஸ்தான்
திபெத்து
நேப்பாளம்
டில்லி
ஜெயபுரி
இராஜஸ்தான்
உத்திரப் பிரதேசம்
லக்ஷ்மணபுரி
சிக்கிம்
பூட்டான்
அஸாம்
மணிப்பூர்
பாட்னா
பீஹார்
குஜராத்
அஹமதாபாத்
இந்தூர்
போப்பால்
மத்தியப் பிரதேசம்
பர்மா
ஒரிஸ்ஸா
கட்டாக்
புவனேஸ்வரம்
பம்பாய்
மகாராஷ்டிரம்
பூனா
ஹைதராபாத்
விசாகப்பட்டினம்
ஆந்திரப்பிரதேசம்
மைசூர்
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
சென்னை
புதுச்சேரி
கேரளம்
தமிழ்நாடு
கொச்சி
கன்னியாகுமரி

வாழ்கின்றனர். பாகிஸ்தானத்தில் வாழும் இந்துக்கள் சிலரே ஆவர்.

நமது தேசத்தில் ஆதிகாலம் தொடங்கிப் பல சாம்ராஜ்யங்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. முதன்முதலில், மௌரியர் என்ற அரச வமிசத்தினர் வட இந்தியாவையும் தென்னிந்தியாவின் பெரும் பகுதியையும் ஆண்டனர். மௌரியர் வீழ்ச்சியுற்ற சிலகாலத்திற்குப்பின், குப்தர் என்ற அரச வமிசத்தினர் வட இந்தியாவில் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்தனர். காலக்கிரமத்தில், குப்தர்களின் ஆட்சியும் மறைந்தது. பின்பு ஹர்ஷர் என்னும் அரசர் தம் அரசை வட இந்தியாவின் பெரும்பகுதியில் பரப்பினர். அவர் ஆண்ட அதே காலத்தில், தென்னிந்தியாவில் பல்லவர் என்ற அரச வமிசத்தினர் வலிமையுடன் விளங்கினர். பல்லவர்களின் ஆட்சி மறைந்த பின்னர், சோழ அரசர்கள் தென்னிந்தியாவில் தமது சாம்ராஜ்யத்தை நிறுவினர்.

ஹர்ஷரது சாம்ராஜ்யம் அவர் காலத்துக்குப்பின் மறைந்தது. வட இந்தியா பல சிறுசிறு இராச்சியங்களாகப் பிளவுபட்டது. இவைகளை ஆண்ட அரசர்கள் தங்களுக்குள்

ஒற்றுமையின்றி இருந்ததால் நாட்டின் பலமும் அமைதியும் சீரழிந்தன. இத்தருணத்தை வடமேற்குப் பிரதேசத்திலிருந்து வந்த துருக்கியர் பயன்படுத்திக்கொண்டனர். இவர்கள் வட இந்தியாவையும் தென்னிந்தியாவின் ஒரு பகுதியையும் கைக்கொண்டு டில்லியைத் தலைநகராகக்கொண்ட ஒரு சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்தனர். இந்தச் சாம்ராஜ்யமும் நாளடைவில் பலம் குன்றியது. இதன்பின் வடமேற்கிலிருந்து வந்த மொகலாய வமிசத்தினர் வட இந்தியாவைக் கைப்பற்றினர்; தென்னிந்தியாவின் வட பகுதியையும் ஆக்கிரமித்தனர். இம்மொகலாய சாம்ராஜ்யமும் நாளடைவில் பலம் குன்றியது.

இந்நிலையில் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் ஆங்கிலேயர் என்ற ஐரோப்பிய இனத்தவர் இந்தியாவுக்கு வந்தனர். நாளடைவில் இவர்கள் நம் தேசத்தில் நிலவிய கலவரத்தையும் ஒற்றுமையின்மையையும் பயன்படுத்திக்கொண்டு இந்தியாவைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர் ஆட்சியில் பல காலம் இருந்து வந்த நம் தேசம் 1947இல் சுதந்திரமடைந்தது. இதற்கு மூல காரணமாக இருந்தவர் இணையற்ற தலைவரான மகாத்மா காந்தியடிகளே. அவருடைய பெரு முயற்சியால்

தான் ஆங்கிலேயர் நமக்குச் சுதந்திரம் வழங்க இசைந்தனர்.

நம் தேசம் பழங்காலம் முதல் மிகவும் புகழுடன் விளங்கி வந்திருக்கிறது. இந்திய நாகரிகம் என்னும் ஒரு தனிப்பட்ட நாகரிகம் இங்குத் தோன்றியது. சரித்திரப் புகழ்பெற்ற பெரியோர் பலர் நம் தேசத்தில் தோன்றினர். உலகிற்கே பல நல்வழிகளைக் காட்டிச் சீர்திருத்தம் செய்துவந்த அசோகர், ஹர்ஷர், விக்கிரமாதித்தர், அக்பர், சிவாஜி போன்ற பேரரசர்கள் தோன்றி வாழ்ந்த சிறப்புடையது நம் தேசம். புத்தர், சங்கரர், இராமானுஜர், கபீர், நானக், இராமகிருஷ்ணர், விவேகாநந்தர் போன்ற உத்தமர்கள் தோன்றி வாழ்ந்ததும் இத்தேசத்தில்தான்.

உயர்ந்த மலைகளும், வற்ருத ஆழ்ந்த நதிகளும், செழிப்பான சமவெளிகளும், பெருங்காடுகளும், மற்றும் எல்லாவகை இயற்கை வளங்களும் நிரம்பப் பெற்றது நமது தேசம். நெல், கோதுமை, கரும்பு, காப்பி, தேயிலை, நறுமணப் பொருள்கள், எண்ணெய் வித்துக்கள், பலவகைத் தானியங்கள், பலவகைக் கனிவகைகள் இவற்றைக் கணக்கின்றித் தருகிறது நமது தேசம்.

நமது தேசத்தில் தற்போது மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. நீங்கள் பெரியவர் களானபின் இந்நாட்டு ஆட்சியில் பங்கு கொள்வீர்கள். அதற்குத் தகுதியுள்ளவர் களாக விளங்கவேண்டுமானுல், நீங்கள் ஊக்கத் துடன் நன்கு படிக்கவேண்டும். சிறப்பாக நம் தேசத்தின் சரித்திரத்தை நன்கு கற்பது மிகவும் அவசியம்.

முக்கியமாக, நமது தேசத்தை உலகில் எல்லா வகைகளிலும் மேலோங்கி வளரச் செய்ய வேண்டுவது பாரத மக்களான நமது கடமை. தேசத்தில் எப்பகுதியில் இன்னல் நேர்ந்தாலும் அது நமக்கு நேர்ந்த இன்னல் எனக் கருத வேண்டும். மொழிகளிலும் மதங் களிலும் பழக்க வழக்கங்களிலும் மக்கள் வேறுபட்டிருக்கலாம். ஆனுல், நாம் அனே வரும் பாரத மக்கள் என்ற ஒரே இனத்தவ ராவோம். நமக்குள் ஒற்றுமை இல்லாதிருந்த தால்தான் நாம் அன்னியர்களின் ஆட்சிக்கு அடிமைகளானேம். இதை என்றும் மறவா தீர்கள்.

எனவே, இத்தேசத்தின் நற்பெயரையும், நலனேயும் மங்காமல் காப்பது நம் தலைசிறந்த கடமைகளில் ஒன்ருகும்.

வினுக்கள்

1. இந்தியா என்ற பெயர் எப்படி வந்தது ?

2. பாகிஸ்தானம் எப்பொழுது பிரிந்தது? அதில் அடங்கியுள்ள பகுதிகள் யாவை ?

3. இந்தியாவில் தோன்றி மறைந்த சாம்ராஜ்யங்களைத் தெரிவி.

4. நமது தேசத்தினர் சுதந்திரமடைந்தது எப்பொழுது? அதற்கு மூலகாரணமாக இருந்தவர் யார் ?

5. நம் தேசத்தில் தோன்றிய பேரரசர்கள் யாவர்? பெரியோர்கள் யாவர் ?

6. நமது தலைசிறந்த கடமை யாது ?


பயிற்சி : 1. நமது தேசத்தில் தோன்றி மறைந்த சாம்ராஜ்யங்களின் படங்களைச் சேகரித்து, உன் படப் புத்தகத்தில் ஒட்டி வை. 2. நமது தேசத்தில் தோன்றிய உத்தமர்களின் படங்களைச் சேகரி.

—:o:—

2. சிந்துநதிப் பிரதேச நாகரிகம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் மனிதர்கள் நாகரிகமற்றவர்களாயிருந்தனர். அவர்கள் குகைகளில் வசித்து வந்தனர். முதன் முதல் கல்லினுல் பல கருவிகளைச் செய்து உபயோகித்தனர். வேட்டை யாடுவதே அவர்களின் முக்கியத் தொழிலாக இருந்து வந்தது. அவர்களுக்குக் **கற்கால மனிதர்கள்** என்று

பெயர். அவர்கள் உபயோகித்து வந்த கற்கருவிகளை நாம் இன்றும் பல பொருட்காட்சிச் சாலைகளில் காணலாம்.




கற்கருவிகள்

பிறகு நெருப்பை உண்டுபண்ணவும் அதை உபயோகிக்கவும் அவர்கள் கற்றுக் கொண்டனர். ஆடு, மாடு, நாய் முதலிய மிருகங்களை அம்மனிதர்கள் வளர்க்கத் தொடங்கினர். அங்ஙனம் வளர்த்து வந்த காலத்தில் புல் இருந்த இடங்களைத் தேடித் திரிந்ததால் அவர்கள் நாடோடிகளாக வாழ்ந்தனர். பின்னர் ஆடைகள் நெய்யக் கற்றுக் கொண்டனர். காலம் செல்லச் செல்லச் செம்பு, இரும்பு, தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களை உபயோகிக்கவும், வில், அம்பு, ஈட்டி முதலிய ஆயுதங்களைச் செய்யவும், அவற்றை உபயோகிக்

கவும் அறிந்தனர். பின்பு காடுகளை அழித்து விவசாயம் செய்ய ஆரம்பித்தனர். அதன் பிறகே இவர்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி வசிக்கலாயினர்.

நம் தேசத்தில் தற்போதும் சில பகுதிகளில் ஆதிக் குடிகள் வசிக்கின்றனர். இவர்களைப் **பூர்விகக் குடிகள்** என்று அழைக்கிறோம்.




ஆதிக் குடிகளின் சந்ததியார் : தோடர்கள்

நமது இராச்சியத்தில் நீலகிரிப் பிரதேசத்தில் வசிக்கும் குறும்பர், இருளர், தோடர் முதலியோரும் ஆதிக் குடிகளைச் சேர்ந்தவர்

களே. இவர்கள் **முந்தா** என்னும் மொழியைப் பேசுகிறார்கள். இவர்கள் சாதாரணமாகக் குட்டையாகவும், கறுப்பாகவும், தட்டையான மூக்கு உடையவர்களாகவும் இருக்கிறார்கள்.

மக்கள் உழவுத் தொழிலைக் கற்ற பிறகு நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழ ஆரம்பித்தனர் என்று பார்த்தோம். தானியங்களைப் பயிர் செய்வதற்கு ஏற்ற இடங்கள் நதியின் அருகே உள்ள சமவெளிகள் என்று அவர்கள் கண்டனர். அதனால் நதிச் சமவெளிகளில் மக்கள் குடியேற, அச்சமவெளிகள் நாளடைவில் கிராமங்களாகவும், சிறு பட்டணங்களாகவும் மாறின. இவ்விதம் நம் தேசத்தில் சிந்து நதி பாயும் சமவெளியில் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் குடியேறி வாழ்ந்து வந்தனர். இவர்களது வாழ்க்கையைப்பற்றி நமக்குச் சமீப காலம்வரையில் தெரியாமலே இருந்தது. சுமார் 35 ஆண்டுகளுக்குமுன் சிந்துச் சமவெளியில் புதைந்து கிடந்த இரு நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று சிந்து மாகாணத்தில் **மொகெஞ்சோ-தாரோ** என்னுமிடம்; மற்றொன்று பஞ்சாப் மாகாணத்தில் **ஹரப்பா** என்னுமிடம். இப்போது இவ்விரண்டு இடங்களும் **பாகிஸ்தான்** நாட்டில் உள்ளன. இப்புதை நகரங்

களிலிருந்து 4000, 5000 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த மக்கள் வாழ்க்கையைப்பற்றி நாம் அறிந்து கொள்கிறோம்.


மொகெஞ்சோ - தாரோவில் ஒரு தெரு

அவர்கள் கட்டிய செங்கல் வீடுகள் காற்றோட்டமுள்ளவையாகவும் விசாலமாகவும் இருந்தன. தெருக்கள் அகன்றும் நேராகவும் இருந்தன. அவைகளில் பல அடுக்குகள் உள்ள வீடுகளும் மாளிகைகளும் இருந்தன. வீடுகளில் குளிக்கும் அறைகளும் கழிவுநீர் செல்வதற்குப் பாதாளச் சாக்கடைகளும் கட்டப்பட்டிருந்தன. இவைகள் வழியாகக் கழிவுநீர், நகரத்துக்கு வெளியே அப்புறப் படுத்தப்பட்டது. வீட்டிற்குள் இருக்கும் குளிக்கும் அறைகள் தவிர, பொதுவாக மக்கள் நீராடப் பல வசதிகள்கொண்ட குளங்களும் இருந்தன. அக்காலத்தில் இப்பிரதேசம் செழிப்புடன் இருந்தது. கோதுமையும் வால்

கோதுமையும் இங்குப் பயிர் செய்யப்பட்டன. மக்கள் ஆடுமாடுகளையும், ஒட்டகங்களையும், யானைகளையும் பயன்படுத்திவந்தனர். ஆனால் அக்கால மக்கள் குதிரையைக் கண்டதில்லை.

அக்காலத்தில் இப்பிரதேசம், சுற்றியுள்ள பல நாடுகளுடன் ஏராளமாக வியாபாரம் செய்து வந்தது. பல கைத்தொழில்கள் அப்பொழுது வழக்கத்தில் இருந்து வந்தன. கம்பளி, பருத்தி இவைகளினால் உடைகள் நெய்து பலவித வர்ணங்கள் தீட்டினர். தங்கம், வெள்ளி, செம்பு, தந்தம் முதலியவைகளினால் பல நகைகளும் பொருள்களும் செய்யப்பட்டன. கண்ணாடியிலிருந்து வளையல்கள் முதலான பல பொருள்கள் தயாரிக்கவும் அவர்கள் அறிந்திருந்தனர்; அழகுறச்செய்து பலவகை வர்ணங்கள் தீட்டப்பட்ட மட்கலங்களையும் செய்தனர். அக்காலத்தில் வியாபாரிகள் ஒவ்வொருவரும் தனித்தனி முத்திரைகளை வைத்திருந்தனர். இம்முத்திரைகளில் பல இப்பொழுது கிடைத்திருக்கின்றன. இம்முத்திரைகளில் எழுத்துக்களுமிருக்கின்றன. எழுத்துக்கள் இருப்பதிலிருந்து அம்மக்கள் படிக்கவும் எழுதவும் நன்கு தெரிந்தவர் என்பது புலனாகிறது. ஆனால், இந்த எழுத்துக்களை இன்னமும் வாசித்தறிய முடியவில்லை. இம்முத்திரைகளில் பல உருவங்

கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. வேறுபாடின்றிப் பல மிருகங்களின் உருவங்கள் காணப்படுகின்றன. மேலும் கண்டெடுக்கப்பட்ட உருவச் சிலேகள் முதலியவைகளினின்றும் அம்மக்கள் மிகவும் உன்னதமான கலேயுணர்ச்சிகொண்டவர்கள் என்பது தெரிகிறது.

அக்காலத்தில் கோவில்கள் இல்லே. ஆனல், அம்மக்கள் சில மிருகங்களேயும் மரங்களேயும் வணங்கி வந்தனரெனத் தெரிகிறது. மிருகங்களில் எருதையும், மரங்களில் அரச மரத்தையும் சிறப்பாக வணங்கி வந்தனர். இவைகளேத் தவிர, காளிதேவியைப் போன்றதொரு பெண் தெய்வத்தையும், மூன்று முகங்கள் கொண்ட ஓர் ஆண் தெய்வத்தையும் வணங்கி வந்தனர்.

வினுக்கள்

1. ஆதிக் குடிகள் நாடோடிகளாக இருந்ததேன் ?
2. அவர்கள் நிலேயாகத் தங்கி வாழ ஆரம்பித்தது எப்பொழுது ?
3. நம் நாட்டில் தற்போது வசிக்கும் ஆதிக் குடிகளின் சந்ததியார் யாவர் ?
4. அவர்கள் எவ்விதத் தோற்றம் உடையவர்கள் ? அவர்கள் பேசும் மொழி யாது ?
5. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரு புதை நகரங்கள் யாவை ? அவை எங்கு, எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டன ?

6. சிந்துச் சமவெளி நாகரிக மக்கள் வாழ்க்கையைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு.

பயிற்சி : 1. பத்திரிகைகளில் வரும் ஆதிக் குடிகளின் படங்களைச் சேகரித்து உங்கள் ஒட்டுப்படப் புத்தகத்தில் ஒட்டி வையுங்கள். 2. களி மண்ணால் பண்டைக் காலக் கற்கருவி களைப்போலச் செய்து உங்கள் பள்ளிப் பொருட்காட்சிச் சாலையில் வையுங்கள்.

—: o :—

3. திராவிடர்களும் ஆரியர்களும்

திராவிடர் : திராவிடர்கள் யார் எனவும், அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்றும் முடிவாகச் சொல்வதற்கில்லை. ஏனென்றால் சிலர், திராவிடர்கள் நம் தேசத்து ஆதிக்குடிகள் என்றும், வேறு சிலர் அவர்கள் ஆரியர்கள் வருவதற்கு முன்பே வடமேற்குக் கணவாய் களின் வழியாக நம் தேசத்திற்கு வந்து குடி யேறியவர்கள் என்றும் கூறுகின்றனர். நாம் முன் பாடத்தில் படித்த மொகெஞ்சோ-தாரோ, ஹரப்பா முதலிய பட்டணங்கள் திராவிடர் களால் கட்டப்பட்டவை என்றும், அவர்கள் சிறந்த நாகரிகம் படைத்தவர்களாக வாழ்ந் தனர் என்றும் கருதுகின்றனர். எஃது எப்படி இருப்பினும் இவர்கள் 5000 ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த நாகரிகத்துடன் நம் தேசத்தில் வாழ்ந்தார்கள் என்பது மட்டும் உறுதி.

திராவிடர்கள் கிராமங்களில் வசித்து வந்தனர். மாமிசம், பலவகைத் தானியங்கள் முதலியவைகளை உணவாகக் கொண்டிருந்தனர். வேட்டையாடுதல், மீன் பிடித்தல், ஆடு மாடு மேய்த்தல், விவசாயம், நெசவு, வியாபாரம் முதலியவை அவர்களது முக்கியத் தொழில்களாகும். அவர்கள் அயல் நாடுகளுடனும் வியாபாரம்செய்து வந்தனர். நம் தேசத்திலிருந்து முத்து, தந்தம், நறுமணப் பொருள்கள், அரிசி, சந்தனக்கட்டை, தேக்கு மரம் முதலியவைகளை ரோம், ஆசியா மைனர், பாரசீகம் முதலிய தேசங்களுக்கு அவர்கள் ஏற்றுமதி செய்து வந்தனர்.

திராவிடர்கள் வில், அம்பு, ஈட்டி, வாள் போன்ற ஆயுதங்களை உபயோகித்து வந்தனர். இறந்தவர்களை மண் தாழிகளில் வைத்துப் புதைத்தனர். மரம், பாம்பு முதலியவற்றைத் தெய்வமாக வழங்கினர். அவர்கள் பேசிய மொழியிலிருந்தே திராவிட மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் முதலிய மொழிகள் தோன்றின. திராவிடப் பெண்கள், பொன்னாலும், வெள்ளியாலுமாகிய ஆபரணங்களை அணிந்திருந்தனர்.

ஆரியர்கள் : திராவிடர்கள் இந்தியாவில் குடியேறிய வெகு காலத்திற்குப்பின் ஆரியர்

கள் என்ற ஒரு வகுப்பினர் நம் தேசத்திற்கு வந்தனர். இவர்கள் வசித்துவந்த இடத்தில் குளிர் அதிகமாக இருந்ததாலும், இவர்கள் மேய்த்து வந்த ஆடு மாடுகளுக்குப் புல்தரை போதாததாலும், மக்கள் தொகை அதிகமான தாலும் புதிய இடங்களை நாடிச் சென்றனர். அப்படிச் சென்றவர்களில் ஒரு பிரிவினர் ஐரோப்பிய நாடுகளிலும், மற்ெருரு பிரிவினர் பாரசீகத்திலும் குடியேறினர். வேறு ஒரு பிரிவினர் நம் தேசத்தின் வடமேற்கேயுள்ள கணவாய்களின் வழியாக வந்து சிந்து நதி தீரத்தில் குடியேறினர்.

ஆரியர்கள் வெண்மையான நிறமும், உயரமும், கம்பீரமான தோற்றமும் கொண்டவர்கள்; வீரமும் தைரியமும் உடையவர்கள்.

ஆரிய மொழிகளின் பிரிவுகளைச் சார்ந்த மொழிகளே ஐரோப்பாவின் பெரும் பகுதிகளிலும் பேசப்படுகின்றன. பாரசீக மொழியும் சமஸ்கிருத மொழியும் வட இந்தியாவில் இப்பொழுது வழங்கிவரும் இந்தி, வங்காளி, மராட்டி முதலிய மொழிகளும் ஆரிய மொழிகளின் பிரிவுகளே. ஆரிய மொழி பேசியவர் இந்தியாவில் பரவி, திராவிட மொழி பேசியவரைத் தென்னிந்தியாவிற்குத் துரத்தி விட்டனர்; ஆகையால் திராவிட மொழிகளாகிய

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலியவை இப்பொழுது தென்னிந்தியாவில் மட்டுமே வழங்குகின்றன.

ஆதிகாலம் முதற்கொண்டே மக்களின் நாகரிக வகைகள் ஒன்ருகக் கலந்தன. வட இந்தியாவில் தங்கியிருந்த திராவிடரது கூட்டுறவினுல் முதலிலிருந்தே ஆரியர்களின் நாகரிகம் பாதிக்கப்பட்டது. அதேவிதமாகத் தென்னிந்தியாவில் பரவிய ஆரியர்களின் நாகரிகத்தால் திராவிடர்களின் நாகரிகமும் பாதிக்கப்பட்டது. சிந்துப் பிரதேச நாகரிகத்தைச் சிதைத்தவர் ஆரிய மொழி பேசிய மக்கள் என்று சிலர் கருதுவர்; அவ்விதமாயின் இவ்வாரிய மொழி பேசியவர் சிந்துப் பிரதேச நாகரிகத்தின் பல பகுதிகளையும் மேற்கொண்டிருந்திருக்கக் கூடும். இவ்வித சமரசமே பொதுவான இந்திய நாகரிகம் ஏற்படுவதற்குப் பெரிதும் காரணமாக இருந்து வருகிறது.

முதன்முதலில் திராவிட மொழி பேசியவரும் ஆரிய மொழி பேசியவரும் தனித்தனி இனமாக இருந்திருக்கலாம். ஆனுல், நாளடைவில் இவ்விரு இனங்களும் கலந்துபோயின. இக்காலத்தில் இந்த மொழிகளைப் பேசுபவரைத் தனித்தனி இனமாகக் கொள்வது எளிதன்று.

ஆரிய மொழி பேசியவர் எவ்விதம் வாழ்ந்தனர் என்பதை வேதங்கள் என்னும் நூல்களிலிருந்து ஒருவாறு அறிகிரும். இவ் வேதங்கள் ருக், யஜுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வகைப்படும். இவைகளில் ருக் வேதமே மிகவும் பழைமையானதும் முக்கியமானதும் ஆகும். ஆரிய மொழி பேசிய மக்கள் பல பிரிவுகளாக (Tribes) இருந்தனர். ராஜா என்ற பெயர்கொண்ட தலைவன் ஒவ்வொரு பிரிவிற்கும் அரசனுக இருந்து வந்தான். அரசன் வழக்கு விசாரிப்பதிலும், போர் நடத்துவதிலும் தலைவனுக இருந்தான். ஓர் அரசனுக்குப் பிறகு அவனது மூத்த குமாரனே அரசனுனன்.

மக்கள் பொதுவாகக் கிராமங்களில் வாழ்ந்தனர். அவர்களின் முக்கியமான கைத்தொழில் விவசாயம். அவர்கள் கம்பளியால் நெய்த உடைகளையே உடுத்தினர்; தங்க நகைகளை அணிந்தனர். அக்காலத்தில் நாணயங்கள் நடைமுறைக்கு வரவில்லையாதலால், வியாபாரத்தில் பண்டங்களை மாற்றுவதற்குப் பசுக்களையே அவர்கள் நாணயம்போல் பயன்படுத்தி வந்தனர்.

பெண்களுக்குச் சமூகத்தில் மிகவும் மேன்மையான நிலை கொடுக்கப்பட்டிருந்தது. ஆண்

மக்கள் செய்த யாகங்களில் அவர்களது மனைவியரும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். பல வேத மந்திரங்கள் பெண்களால் செய்யப்பட்டிருக்கின்றன. பெண்கள் வயது வந்த பின்பே மணம் புரிந்துகொண்டனர். விதவைகள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

அக்கால மக்கள் இறந்தவர் உடலை அக்கினியால் எரிக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டனர். குதிரையின் உபயோகத்தை அவர்கள் அறிந்திருந்தனர். ருக் வேத காலத்திற்குப்பின் இரும்பின் பயனையும் அறியலாயினர்.

அம்மக்கள் இயற்கைச் சக்திகளையே தெய்வமாக வணங்கினர். இந்திரன் இடியை ஆயுதமாகக் கொண்டவன்; வானவர் தலைவன். வருணன் கடல் தெய்வம். அக்கினி நெருப்பிற்குத் தெய்வம். மேலும் சூரியன், சோமன் முதலிய தெய்வங்களையும் வணங்கினர். சிவனும் விஷ்ணுவும் அப்பொழுது முக்கியத் தெய்வங்கள் ஆகவில்லை. கடவுள் வணக்கத்தில் யாகங்களே முக்கியமாக இருந்தன. அக்கினியில் மந்திரங்கள் சொல்லி ஆகுதியிட்டால் தெய்வங்களுக்குத் திருப்தி உண்டாவதாக நினைத்தனர். அக்காலத்தில் கோவில்களும் விக்கிரகங்களும் இல்லை; இக்காலத்திலுள்ளவை போன்ற சாதி, சமயப் பிரிவுகளும்

இல்லை. ருக்வேத காலத்திற்குப் பின்னரே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் பிரிவினைகள் ஏற்பட்டன.

ஆரியர்கள் வில், அம்பு, கத்தி, கோடரி முதலிய போர் ஆயுதங்களை உபயோகித்தனர். திராவிடர்களைப் போலவே இவர்களும் கிராமங்களில் வசித்தனர். ஆடு, மாடுகளை வளர்த்தும், கோதுமை, நெல், காய்கறிகள் முதலியவற்றைப் பயிரிட்டும் வந்தனர். பால், தயிர், நெய், மாமிசம் முதலியவை இவர்களுடைய உணவு. சோமம் என்னும் ஒருவகை மதுவை இவர்கள் அதிகம் விரும்பினர். இவர்கள் பருத்தி, கம்பள ஆடைகளை உபயோகித்தனர். ஆரியர்கள் ஆடல், பாடல்களை அதிகம் விரும்பினர். ஆரியக் குடும்பத்திற்குத் தந்தையே தலைவன். அவன் சொற்படியே குடும்பத்தினர் நடந்தனர்.

வினாக்கள்

1. திராவிடர்களின் முக்கியமான தொழில்கள் யாவை?
2. திராவிடர்கள் என்னென்ன பொருள்களை வெளி நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்தனர் ?
3. திராவிட மொழிகள் யாவை ?
4. ஆரியர்கள் புதிய இடங்களை நாடிச் சென்றதேன் ?
5. வேதங்களின் நான்கு வகைகளைக் கூறு. அவற்றுள் மிகப் பழைமையானது எது ?
6. ஆரியப் பெண்கள் எவ்வாறு மேம்பட்டிருந்தனர் ?

பயிற்சி : 1. இந்தியா படம் ஒன்று வரைந்து அதில் கைபர், போலன் கணவாய்களைக் குறி. 2. ஆரியர்கள் முதலில் குடியேறிய சிந்துநதி தீரத்தையும், மொகெஞ்சோ-தாரோ, ஹரப்பா நகரங்களையும் குறியுங்கள்.

—: o :—

4. வேதங்களும் இதிகாசங்களும் புராணங்களும்

வேதங்கள் : ஆரியர்கள் சிந்துநதி தீரத்தில் குடியேறிய காலம் ஏறக்குறைய கி. மு. 2500 என்று சொல்லலாம். இவர்கள் இங்குத் தங்கியிருந்த காலத்தில் **ருக் வேதம்** பாடப்பட்டது. ஆரியர்களின் மக்கள் தொகை நாளடைவில் அதிகரிக்கவே, அவர்கள் சிறிது சிறிதாகக் கங்கைச் சமவெளியிலும் குடிபுக ஆரம்பித்தனர். பின்னரே மற்றைய மூன்று வேதங்களான **யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்** என்பவை பாடப்பட்டன. ருக் வேதம் 1028 துதிப் பாடல்களைக் கொண்டது. யஜுர் வேதம் யாகங்கள் செய்ய வேண்டிய முறைகளைக் குறிக்கின்றது; சாம வேதம் இசையுடன் அமைக்கப்பட்ட ருக் வேதப் பாடல்களைக் கொண்டது. அதர்வண வேதத்தில் மாந்திரிகம் அடங்கியிருக்கிறது.

வேதங்கள் தலைமுறை தலைமுறையாகப் பாடப்பட்டு வந்தன. வேதவியாசர் என்பவர் வேதங்களை இயற்றினர்.

வேதங்களில் உயர்ந்த தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. வேதங்கள்தான் இந்து

மதத்தின் அடிப்படையாகும். இந்த நான்கு வேதங்களிலிருந்தும் அக்காலத்திய ஆரியர்களின் வாழ்க்கை முறைகளைப்பற்றியும், நாகரிகத்தைப்பற்றியும் அறிந்து கொள்ளுகிறோம்.

இதிகாசங்கள் : வேதங்களிலுள்ள சிறந்த தத்துவங்களைப் பாமர மக்கள் புரிந்துகொள்ள முடியாது. அந்த உயர்ந்த கருத்துக்களைப் பாமர மக்கள் புரிந்துகொள்ளும்படி இதிகாசங்களும் புராணங்களும் எழுதப்பட்டன.

இதிகாசங்கள் மூலம் ஆரியர்கள் கங்கைச் சமவெளியில் வசித்தபோது அவர்களிடமிருந்த நாகரிகம் நமக்குத் தெரிகிறது. நல்ல நீதிகள் அடங்கிய நீண்ட கதையை **இதிகாசம்** என்று சொல்லுவர். வேதகாலத்திற்குப் பிறகு ஆரியர்களிடையே இரண்டு இதிகாசங்கள் தோன்றின. அவை **இராமாயணமும் மகாபாரதமும்** ஆகும். இராமாயணத்தை வால்மீகி முனிவரும், மகாபாரதத்தை வேதவியாசரும் எழுதினார்கள்.

இராமனது வரலாற்றைப்பற்றிச் சொல்லும் கதை இராமாயணம். பாண்டவரையும் கௌரவரையும்பற்றிக் கூறும் கதை மகாபாரதம். மகாபாரதத்தின் பின் பாகத்தில் அடங்கியிருக்கும் **பகவத் கீதை** கிருஷ்ணனால்

அர்ஜுனனுக்குக் கூறப்பட்டது. இதை இந்துக்கள் மிகவும் சிறப்பானதாகக் கருதுகின்றனர்.

புராணங்கள் : புராணங்களையும் வேத வியாசரே இயற்றினர். புராணக் கதைகள் மூலம் வேத தத்துவங்கள் பாமர மக்களுக்கு விளக்கப்பட்டன. புராணங்கள் பழங்கால ஆரிய மன்னர்களின் வமிசங்களைப்பற்றிக் கூறுகின்றன. அவற்றின்மூலம் வட இந்தியாவிலுள்ள ஆரிய இராச்சியங்களைப்பற்றி நாம் அறிய முடிகிறது.

வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகிய மூன்றும் வட மொழியில் எழுதப்பட்டன. அவை நமது நாட்டின் சிறந்த இலக்கியப் பொக்கிஷங்களாகும்.

வினாக்கள்

1. வேதங்கள் எப்பொழுது எழுதப்பட்டன ?
2. வேதகாலம் என்பது யாது ?
3. இதிகாசங்களைப்பற்றி விவரி.
4. புராணங்களைப்பற்றி விளக்குக.

பயிற்சி : *1. வடஇந்தியாவின் படம் வரைந்து அதில் இதிகாச கால இராச்சியங்களைக் குறிப்பிடுக. 2. அசுவமேத யாகம் செய்தவர்கள், சுயம்வரம் நடத்தியவர்கள்—இவர்களில் சிலரைப்பற்றிக் கேட்டறி.*

—: o :—

5. மௌரிய சாம்ராஜ்யம்

கிறிஸ்து பிறப்பதற்கு 300 ஆண்டு களுக்குமுன் வட இந்தியாவில் **மகதம்** என்ற ஒரு பெரிய சாம்ராஜ்யம் இருந்தது. அதை மௌரிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். மௌரிய வமிசத்தை ஏற்படுத்தியவர் **சந்திர குப்த மௌரியர்** என்பவர். இவருடைய தாயார் பெயர் **மூரா.** அதனுல்தான் இவ ருடைய வமிசத்திற்கு **மௌரிய வமிசம்** என்ற பெயர் வந்தது.

சந்திரகுப்த மௌரியருக்குச் **சாணக்கியர்** என்பவர் மந்திரியாக இருந்தார். அவர் **விஷ்ணு குப்தர்** என்றும், **கௌடில்யர்** என்றும் அழைக் கப்பட்டார். அவர் **அர்த்த சாஸ்திரம்** என்று சொல்லப்படும் ஒரு சிறந்த அரசியல் நூலை எழுதியுள்ளார்.


சந்திரகுப்தர் பட்டத்திற்கு வந்த மூன்று ஆண்டுகளுக்குள் **செலுக்கஸ் நிக்கேடர்** என் னும் கிரேக்க வீரன் மகத சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்ததனுல் கொடிய போர் மூண்டது. இறுதியில் செலுக்கஸ் சந்திர குப்தரிடம் தோல்வியுற்ருன். அதனுல் செலுக் கஸ் சந்திரகுப்தருக்குக் காபூல், காந்தகார், பலுசிஸ்தானம் முதலிய நாடுகளைக் கொடுத்

தான். மேலும் தன்னுடைய மகளேயும் சந்திர குப்தருக்கு மணம் செய்து கொடுத்தான். இவற்ருல் மகிழ்வடைந்த சந்திரகுப்தர் செலுக் கஸுக்கு 500 யானைகளேப் பரிசாகக் கொடுத் தார். சில நாட்களுக்குப்பின் செலுக்கஸ் மெகஸ்தனிஸ் என்பவரை இராஜதூதராகச் சந்திரகுப்தர் சபைக்கு அனுப்பினுர். மெகஸ் தனிஸ் தம் குறிப்புக்களே இண்டிகா என்னும் நூலில் எழுதியுள்ளார். இந்நூலிலிருந்து சந்திரகுப்தரின் ஆட்சியைப் பற்றி நாம் அறிந்து கொள்ளுகிருேம்.

மகத சாம்ராஜ்யத்தின் தலேநகராக விளங் கியது பாடலிபுத்திரம் என்னும் பட்டணம். இது சுமார் பதினுறு கிலோ மீட்டர் நீளமும், சுமார் பதினுன்கு கிலோ மீட்டர் அகலமும் கொண்டிருந்தது. இதனைப் பரிபாலிக்க 30 அங்கத்தினர்கள்கொண்ட ஒரு நகர சபை இருந்தது. இச்சபை ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் அதனதன் வேலேயைச் செவ்வனே செய்து வந்தது.

மகத சாம்ராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரித்து ஆளப்பட்டு வந்தது. அச்சாம்ராஜ்யத் தில் தேர், யானை, குதிரை, கால்கள் ஆகிய நால்வகைப் படைகளும் இருந்தன.


சந்திரகுப்தருக்குப்பின் அவர் மகன் **பிந்து சாரர்** பட்டம் பெற்ருர். இவரது குமாரர் தான் உலகப் பிரசித்தி பெற்ற **அசோகர்.** அசோகர் பட்டத்திற்கு வந்தவுடன் தம்



அசோக சாம்ராஜ்யம்

சாம்ராஜ்யத்தைப் பெரிதாக்க வேண்டுமென்று எண்ணினர். ஆகவே, **கலிங்க** நாட்டின் (ஒரிஸ்ஸா)மீது படையெடுத்தார். இப்போரில் அசோகரே வெற்றிபெற்ருர். ஆனலும் அப்

போரில் ஏற்பட்ட உயிர்ச்சேதத்தைப் பார்த்து மனங்கலங்கி, இந்தப் பெருஞ் சேதத்திற்குத் தாமே காரணம் என்று வருந்தி, இனி, தாம் போரே செய்வதில்லை என்று உறுதி பூண்டார்.



அசோகர் நாட்டிய கல் தூணின் சிகரம்

இப்போரின் விளைவால் மனம் மாறிய அசோகர் பௌத்த மதத்தைத் தழுவினர்; அம் மதத்தைப் பரப்புவதில் மிகவும் ஊக்கங் கொண்டார். மலைப் பாறைகளிலும், குகைகளிலும், கற்றூண்களிலும் பௌத்தக் கொள்கைகளைப் பொறித்து வைத்தார். இக்கல்வெட்டுக்களை நாம் இன்றும் சாஞ்சி, சாரநாத் முதலிய இடங்களில் காணலாம். பௌத்த மதத்தைப் பரப்ப, பௌத்த மதத் துறவிகளை எகிப்து, கிரீஸ், சிரியா, இலங்கை முதலிய நாடுகளுக்கு அனுப்பினர்.

அசோகர் மக்களுக்கு அநேக நன்மைகளைச் செய்தார். பிரயாணிகள் தங்குவதற்குச்

சத்திரங்களையும், சாலைகளில் நிழல் தரும் மரங்களையும் அமைத்தார். நோயாளிகளுக்கு வைத்தியசாலைகள் ஏற்படுத்தினர். மிருகங்களுக்கும் வைத்தியசாலைகளை நிறுவினர். அவர் நாற்பது ஆண்டுகள் மிகவும் புகழுடன் அரசு செலுத்தி, கி. மு. 232இல் காலமானர்.

அசோகர் நாட்டிய கற்றூண்களில் உள்ள தர்ம சக்கரம்தான் நம் தேசீயக் கொடியின் நடுவில் இருக்கிறது.

வினக்கள்

1. மௌரிய வமிசம் என்று பெயர் வரக் காரணம் என்ன ?
2. சாணக்கியர் யார் ? அவர் எழுதிய நூல் எது ?
3. சந்திரகுப்தருக்கும் செலுக்கஸுக்கும் நடந்த போரின் முடிவைப்பற்றிக் கூறுக.
4. பாடலிபுத்திரத்தின் நகர ஆட்சி எவ்வாறு நடந்தது?
5. கலிங்கப் போரின் முடிவென்ன ? இது அசோகரின் மனத்தை எவ்வாறு மாற்றியது ?
6. அசோகர் எவ்வாறு பௌத்த மதத்தைப் பரவச் செய்தார் ? அவர் மக்களுக்குச் செய்த நன்மைகள் யாவை ?

பயிற்சி : 1. உலகப் படத்தில் அசோகர் பௌத்த மதத்தைப் பரவச் செய்த நாடுகளைப் பார்த்துத் தெரிந்துகொள். 2. அசோகர் காலக் கல்வெட்டுக்களின் படங்கள், கற்றூண்களின் படங்கள் இவைகளைச் சேகரித்து ஒட்டுப் படப் புத்தகத்தில் ஒட்டிவை.

—: o :—


6. குப்த மன்னர்கள்

கி. பி. 4ஆம் நூற்ருண்டில் மகத சாம்ராஜ்யத்தை ஒரு புதிய வமிச அரசர்கள் அரசாள ஆரம்பித்தனர். ஸ்ரீ குப்தன் என்பவர் இவ்வமிசத்தை நிறுவியதால் இது குப்த வமிசம் எனப்பட்டது. கி. பி. 320இல் முதலாம் **சந்திரகுப்தர்** என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவர் சிறந்த போர்வீரர். இவர் ஆட்சியின் ஆரம்பத்திலிருந்துதான் குப்த **சகாப்தம்** தொடங்கியது. சந்திரகுப்தர் 10 ஆண்டுகள் அரசாண்டார். கி. பி. 330ஆம் ஆண்டு, இவரது மகனுரான **சமுத்திரகுப்தர்** பட்டத்திற்கு வந்தார்.

சமுத்திரகுப்தர் ஏறக்குறைய 50 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவரும் சிறந்த போர்வீரர். இவர் திக்விஜயம் செய்து, விந்திய மலைகளைக் கடந்து ஆந்திரப் பிரதேசத்திற்குள் சிறிதுதூரம்வரை வந்து திரும்பிச் சென்ருர். தமது வெற்றிகளுக்கு அறிகுறியாக அசுவமேத யாகம் செய்தார். இவர் பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக்கொண்டு தம் பரந்த சாம்ராஜ்யத்தை ஆண்டார்.


சமுத்திரகுப்தருக்குப் பிறகு இவரது குமாரர் இரண்டாம் சந்திரகுப்தர் பட்டத்திற்கு வந்தார். இவர் பட்டத்திற்கு வந்தவுடன்

இந்தியாவின் மேற்குப் பக்கத்திலுள்ள **சாகர்கள்** என்னும் சாதியாரை வென்ருர். அதனல் இவருக்குச் **சாகாரி** என்ற சிறப்புப் பெயர்



உண்டாயிற்று. இவர் வெற்றியில் சூரியனைப் போன்றவர் என்பதைக் காட்ட **விக்கிரமாதித்தியர்** என்ற சிறப்புப் பெயரையும் பெற்ருர்.

குப்தர்களின் ஆட்சியில் இவரது காலம் உன்னத நிலையை அடைந்தது.



விக்கிரமாதித்தியரின் காலத்து நாணயம்

விக்கிரமாதித்தியருடைய சபையில் ஒன்பது அறிஞர்கள் இருந்தனர். இவர்கள் **நவரத்தினங்கள்** என்று அழைக்கப்பட்டனர். இவர்களில் முக்கியமானவர் **காளிதாசர்**. இவர் **சாகுந்தலம்**, இரகுவம்சம் என்ற சிறந்த நாடகங்களை வடமொழியில் எழுதியுள்ளார். வான சாஸ்திர நிபுணர் **ஆரியபட்டரும்** இன்னும் பல கலைஞர்களும் இவரது சபையில் இருந்தனர். சிற்பம், சித்திரம், நாடகம் போன்ற கலைகள் இவர் காலத்தில் வளர்ச்சி யடைந்தன. **அமரம்** என்னும் வடமொழி அகராதியும் இவர் காலத்தில் எழுதப்பட்டது. அஜந்தாக் குகைகளில் காணப்படும் ஓவியங்கள் இவர் காலத்தில் தீட்டப்பட்டன என்று நம்பப்படுகிறது. ஆகவே குப்தர்கள் அரசாண்ட அக்காலத்தைக்

குப்தர்களின் பொற்காலம் என்று கூறுகின்றனர்.

விக்கிரமாதித்தியர் காலத்தில்தான் பாஹியான் என்ற சீன யாத்ரிகர் நம் நாட்டிற்கு வந்தார். இவர் எழுதிய குறிப்புக்களிலிருந்து, அரசர் மக்கள் நலனைப்பேணி அரசு புரிந்தார்; பல பெரிய பட்டணங்கள் இராச்சியத்திலிருந்தன; பாடலிபுத்திரத்து வணிகர்கள் தங்கள் பொருளைக்கொண்டு ஒரு பெரிய இலவச மருத்துவச் சாலையை நடத்தினர். மதங்கள் யாவும் சமமாகப் பரிபாலிக்கப்பட்டன என நாம் அக்காலத்துச் சரித்திரத்தைப்பற்றி அறிந்து கொள்ளுகிறோம்.

பாஹியான் பௌத்த மதக் கருத்துக்களில் முக்கியக் கவனம் செலுத்தினமையால் அரசரைப்பற்றி அவர் அதிகம் கூறவில்லை. இருந்தாலும் மக்கள் செழிப்பாய் வாழ்ந்ததைக் குறிப்பிட்டிருக்கிறார். வகுப்பு வித்தியாசங்கள் அக்காலத்திலேயே உண்டாகிவிட்டன என்றும் சண்டாளர் எனும் வகுப்பார் பிற வகுப்பாருடன் கலவாது தனியாக வாழ்ந்ததைப் பற்றியும் பாஹியான் குறிப்பிடுவதிலிருந்து, தீண்டாமை எனும் வழக்கம் அப்பொழுதே தொடங்கிவிட்டதை அறிகிறோம். ஆனால்

பொதுவாக மக்கள் மதுபானம் முதலிய தீய பழக்கங்கள் இல்லாதிருந்தனர்; எங்கும் ஜீவ ஹிம்சை கூடாது என்ற கொள்கை நிலவி யிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஞக்கள்


1. *குப்த சகாப்தம் யார் காலத்தில் ஆரம்பமாகியது?*
2. *சமுத்திரகுப்தரை ஒரு சிறந்த வீரர் என்று ஏன் கருதுகிறோம்?*
3. *இரண்டாம் சந்திரகுப்தருடைய சிறப்புப் பெயர் களை விளக்குக.*
4. *குப்தர்களின் ஆட்சிக் காலத்தைப் பொற்காலம் எனக் கூறுவது ஏன்?*
5. *காளிதாசரது நூல்களைத் தெரிவி.*
6. *பாஹியான் என்பவர் யார்? இவருடைய குறிப்புக் களிலிருந்து நீ அறிவன யாவை?*

பயிற்சி: *1. விக்கிரமாதித்தியரின் கதைகளிலிருந்து பல பகுதிகளைப் படித்துக் குறிப்பு எடு. 2. அஜந்தாக் குகை ஓவியங்களின் படங்களைச் சேகரித்து ஒட்டுப்படப் புத்தகத் தில் ஒட்டிவை.*

—:o:—

7. தென்னிந்தியப் பேரரசர்கள்

வட இந்தியாவில் பல பேரரசர்கள் தோன்



றியது போல விந்தியமலேக்குத் தெற்கேயும் பல

பேரரசர்கள் தோன்றினர். அவர்களில் புகழ் பெற்று விளங்கிய சிலரைப்பற்றிப் படிப்போம்.

இரண்டாம் புலிகேசி:

சாளுக்கியர்கள் கி. பி. 5ஆம் நூற்றுண்டிலிருந்து 7ஆம் நூற்றுண்டு முடியத் தக்காணத்தில் ஆட்சி புரிந்தனர். அவர்களுடைய தலைநகரம் **வாதாபி.** சாளுக்கிய மன்னர்களுள் தலைசிறந்தவர் **இரண்டாம் புலிகேசி** ஆவார். இவர் கி. பி. 608இலிருந்து 640 வரை அரசு புரிந்தார். இவர் பல்லவ மன்னராகிய **மகேந்திரவர்மரைத்** தோற்கடித்து, வெங்கி நாட்டைப் பெற்றுர். அதற்குத் தம் சகோதரராகிய **விஷ்ணுவர்த்தனரை** அதிபதியாக நியமித்தார். புலிகேசி வடநாட்டு மன்னராகிய **ஹர்ஷரைத்** தோற்கடித்தார். புலிகேசியின் வெற்றிச் செய்திகள் பாரசீகம்வரை எட்டின. பாரசீக மன்னரான **இரண்டாம் குஸ்ரூ** புலிகேசியின் நட்பைப் பெறுவதற்கு அவருக்குப் பல அன்பளிப்புக்களை அனுப்பினுர். அவருடைய தலைநகரமாகிய வாதாபிக்குச் சீன யாத்திரிகர் **யுவான் சுவாங்** விஜயம் செய்து, அவரைப்பற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

இவ்வளவு வல்லமை பொருந்திய புலிகேசியை மகேந்திரவர்ம பல்லவரின் புதல்வ

ராகிய **நரசிம்மவர்ம** பல்லவர் தோற்கடித்து, வாதாபி நகரத்தையும் அழித்தார்.

நரசிம்மவர்ம பல்லவர் (கி. பி. 630-660) :

மகேந்திரவர்ம பல்லவருக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த நரசிம்மவர்மர் தம் தந்தைக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்க எண்ணினர். அதனல் ஒரு பெரும் படையுடன் வாதாபிக்குச் சென்று புலிகேசியுடன் போரிட்டார். அப்போரில் புலிகேசி கொல்லப்பட்டார். நரசிம்மவர்மர் வாதாபியைக் கைப்பற்றி அதைத் தீக்கிரையாக்கினர். இப்போருக்குப் பின் சாளுக்கியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

பின்னர் நரசிம்மவர்மர் பெரும் கப்பற்படையுடன் இலங்கையின்மீது படையெடுத்தார். இலங்கை மன்னனை வென்று தம் நண்பர் **மானவர்மரை** இலங்கைக்கு அரசராக்கினர்.

நரசிம்மவர்மர் காலத்தில் மகாபலிபுரம் ஒரு சிறந்த துறைமுகமாக விளங்கியது. அங்கு ஒரு கலங்கரை விளக்கமும் அமைக்கப்பட்டது. நரசிம்மவர்மருக்கு **மாமல்லர்** என்ற ஒரு பட்டப் பெயர் உண்டு. அப்பெயரால் அந்தத் துறைமுகம் **மாமல்லபுரம்** எனவும் இன்றும் வழங்கப்படுகிறது. அங்குக் கற்களைக்

குடைந்து பல கற்கோவில்களையும் மண்டபங்களையும் நரசிம்மவர்மர் அமைத்தார். அவை ஒற்றைக் கற்கோவில்கள் எனப்படுகின்றன. அவைகளில் பல அழகிய சிற்பங்கள் செதுக்கப்



மகாபலிபுரம் கற்கோவில்கள்

பட்டுள்ளன. ஆகையால் மாமல்லபுரம் அழகிய சிற்பக் கலைக்கூடமாக இன்றும் விளங்குகிறது. இன்றும் பலர் அங்குச் சென்று அச்சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்து வருகின்றனர்.

நரசிம்மவர்மர் காலத்தில் சீன தேசத்திலிருந்து யுவான் சுவாங் என்னும் யாத்திரிகர் இங்கு வந்தார். அவர் காஞ்சி நகரத்தையும்

அதன் மக்களேயும், நரசிம்மவர்ம பல்லவரை யும்பற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

பல்லவர்கள் காலத்தில் காஞ்சி நகரம் மிகச் சிறப்புற்று விளங்கியது. அங்குப் பல கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டிருந்தன. கிரா மங்களில் கிராம மக்களே தங்கள் பொது அலு வல்களேக் கவனித்துக் கொண்டனர்.

காஞ்சி நகரில் கோவில்கள் முதன்முதலில் பாறைகளில் குடையப்பட்டன. அவைகளேக் குகைக்கோவில்கள் என்பர். பிற்காலத்தில் அக்கோவில்களேச் சுற்றிச் செங்கற்களாலும் கருங்கற்களாலும் கட்டி, பெரிய கோவில்களாக விரிவுபடுத்தினர். இக்கோவில்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு, காஞ்சி நகரத்திலுள்ள வைகுண்டப் பெருமாள் கோவில்.

பல்லவர்கள் காலத்தில் வடமொழியும், தமிழும் வளர்ச்சியடைந்தன. தண்டி, பாரவி முதலிய வடமொழிப் புலவர்கள் அம்மொழியில் பல நூல்கள் இயற்றினர். பெருந்தேவனாரும், ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்னும் இவர் களில் சிலரும் தமிழை வளர்த்தனர்.

இராஜராஜர் கி. பி. (985-1014):

பல்லவ ஆட்சிக்குப்பின் சோழர்கள் மீண்டும் வலுவடைந்து தமிழ் நாட்டில் தங்கள் ஆட்சியை நிறுவினர். இச்சோழ அரசர்களில் முதல்வர் **விஜயாலய சோழர்** என்பவர். இவரது தலைநகரம் தஞ்சாவூர். இவரது மரபில் தோன்றிப் புகழோடு சோழநாட்டை யாண்ட பேரரசர்களில் இருவர், இராஜராஜ சோழரும், அவரது மகனுன இராஜேந்திர சோழரும் ஆவர்.

இராஜராஜர் கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரை ஆண்டார். இவரிடம் வலிமை வாய்ந்த பெரும்படையொன்று இருந்தது. அதன் துணைகொண்டு இவர் தென்னுடு முழுவதையும் வென்று தம் நாட்டுடன் சேர்த்தார். பல்லவர் காலத்திற்குப்பின் வடக்கே மீண்டும் வலுவடைந்து விளங்கிய சாளுக்கிய வமிசத்தாரை இவர் படையெடுத்துச் சென்று தோற்கடித்தார்; மேலும் கலிங்கத்தையும் வென்ருர்.

இவரிடம் ஒரு பெரிய கப்பற்படையும் இருந்தது. இதன் துணைகொண்டு சேரர்களைக் காந்தளூர்ச்சாலை என்னுமிடத்தில் வென்ருர். இலங்கையின் ஒரு பகுதியையும் கைப்பற்றினர். பின்னர் அரபிக்கடலில் உள்ள

இலட்சத் தீவுகளையும் வென்றார். தம்முடைய வெற்றிகளை எல்லாம் இவர் சாசனங்களில் செதுக்கி வைத்துள்ளார்.

தஞ்சை நகரில் இன்றும் மிகப் புகழுடன் விளங்கும் **பிரகதீசுவரர் கோவில்** இவர் கட்டிய




தஞ்சைப் பெரிய கோவில்

தாகும். இக்கோவிலுக்குப் **பெருவுடையார் கோவில்** என்றும், **தஞ்சைப் பெரிய கோவில்** என்றும் பெயர்கள் உண்டு. இக்கோவிலின் சுவர்களில் இராஜராஜர் தம்முடைய வெற்றி களைப்பற்றிய குறிப்புக்களைச் செதுக்கி வைத் துள்ளார்.

இராஜேந்திர சோழர் (கி.பி. 1014 - 1045):

இராஜராஜருக்குப்பின் அவருடைய குமாரராகிய இராஜேந்திரர் பட்டத்திற்கு வந்தார். இவர் தம் தந்தையினும் மேம்பட்ட வெற்றி வீரர். இவர் கி. பி. 1014 முதல் 1045 வரை அரசாண்டார். இவர் தம் தந்தையைப் போலவே பல போர்கள் புரிந்தார்.



கங்கைகொண்ட சோழபுரம் கோவில்

முதலில் பாண்டிய நாட்டின்மீது படை எடுத்துச் சென்று வென்ருர். பின்னர் இவர்

இலங்கை முழுவதையும் தன்னடிப்படுத்தினர். சேரர்களையும் சாளுக்கியர்களையும் அடக்கினர். பிறகு இவர் ஒரு பெரும் படையுடன் கலிங்கம், ஒரிஸ்ஸா வழியாகக் கங்கை நதிவரை சென்றார். அங்கிருந்து மேற்கு வங்காளம் சென்று அதனை ஆண்ட மகிபாலனை வென்றார். இதனால் இவருக்குக் **கங்கை கொண்ட சோழர்** என்ற பட்டம் ஏற்பட்டது. மேலும் இவர் தம் கடற்படையைக் கொண்டு மலேயா முதலிய நாடுகளையும் வென்றார்.

இவர் தாம் அடைந்த வெற்றிகளுக்கு அறிகுறியாகக் **கங்கை கொண்ட சோழபுரம்** என்ற ஒரு புதிய தலைநகரை நிறுவினர். அங்கு ஒரு பெரிய கோவிலைக் கட்டினர். சோழகங்கம் என்னும் ஒரு பெரிய ஏரியையும் வெட்டினர். இவர் கல்வியில் மிகவும் ஆர்வம் கொண்டவர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் (கி. பி. இரண்டாம் நூற்றாண்டு):

பாண்டிய இராச்சியம் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைக் கொண்டது. பழங்காலப் பாண்டிய மன்னருள் நெடுஞ்செழியன் என்ற பெயர் கொண்ட மன்னர்கள் இருவர் இருந்தனர். இவருள் முதல் நெடுஞ்செழியனே சிலப்பதிகாரத்தில்

கூறப்பட்ட கோவலனைச் சிரச்சேதம் செய்தவர். இரண்டாம் நெடுஞ்செழியன் சரித்திரப் புகழ் பெற்றவர் ஆவார். இவர் சேர, சோழ அரசர்களையும் அவர்களுடைய சிற்றரசர்களையும் **தலையாலங்கானத்தில்** முறியடித்தார். அதனால் இவர் **தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்** என்று அழைக்கப் பட்டார். இவர் **சாத்தனார், நக்கீரர்** போன்ற புலவர்களை ஆதரித்தார்.

சேரன் செங்குட்டுவன் (கி.பி. இரண்டாம் நூற்றாண்டு):

சேர இராச்சியம் மலையாளம், திருவாங்கூர், கொச்சி ஆகிய பிரதேசங்களைக் கொண்டது. சேர வமிசத்தில் சிறந்தவர் **சேரன் செங்குட்டுவன்** என்னும் மன்னர். இவர் தென்னிந்தியாவில் ஆதிக்கம் பெற்றார். இவருடைய வீரத்தைப் பாராட்டிய கவிகள் இவர் இமயம் வரை படையெடுத்து வென்றார் என்று கூறியுள்ளனர். தென்னிந்தியாவில் இவரது ஆட்சி வலுப்பெற்றிருந்தது. இவரது தம்பியான இளங்கோ என்பவரே **சிலப்பதிகாரம்** என்ற சிறந்த தமிழ் இலக்கியத்தை இயற்றிய **இளங்கோவடிகள்.** செங்குட்டுவனின் இளைய சகோதரர் என்பதனால் 'இளங்கோ' என்றும், அரசைத் துறந்து துறவியாகியதால் 'அடிகள்' என்றும் இவர் அழைக்கப் பெற்றார்.

வினாக்கள்

1. இரண்டாம் புலிகேசி எந்த வமிசத்தைச் சேர்ந்தவர்? அவர் எந்த நூற்றாண்டில் ஆட்சி புரிந்தார் ?
2. புலிகேசியிடம் தோற்ற பல்லவ மன்னர் யார் ?
3. பல்லவர்களின் தலைநகரம் எது ?
4. பல்லவ மன்னர்களில் சிறந்தவர்கள் யாவர் ?
5. நரசிம்மவர்மர் ஏன் சாளுக்கியர்கள்மீது போர் தொடுத்தார் ?
6. கப்பற்படை உதவியால் நரசிம்மவர்வர் பெற்ற வெற்றி யாது ?
7. பல்லவர் காலத்தில் சிற்பக் கலையும் சித்திரக் கலையும் எவ்வாறு புகழ் பெற்றன ?
8. பிற்காலச் சோழர்களில் முதல்வர் யார் ?
9. பிற்காலச் சோழரில் சிறந்த இருவரைத் தெரிவி.
10. இராஜராஜர் பெற்ற வெற்றிகள் யாவை ?
11. இராஜராஜர் கட்டிய கோவிலின் பெயர்களைக் கூறு.
12. 'கங்கை கொண்ட சோழர்' என்ற பட்டம் பெற்றவர் யார் ? அவருக்கு ஏன் அப்பெயர் வந்தது ?
13. கங்கை கொண்ட சோழபுரம் ஏன் நிறுவப்பட்டது?
14. கோவலனைக் கொன்ற பாண்டிய மன்னர் யார் ?
15. தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் என்று பெயர் வரக் காரணம் என்ன ?
16. இவர் ஆதரித்த புலவர்களில் இருவரைக் கூறு.
17. சேர வமிசத்தில் சிறந்த அரசர் யார்? இவரது இராச்சியம் எந்தெந்தப் பிரதேசங்களைக் கொண்டது ?
18. சிலப்பதிகாரம் யாரால் இயற்றப்பட்டது? அவருக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன ?

பயிற்சி: 1. மகாபலிபுரச் சிற்பப் படங்களைச் சேகரித்து ஒட்டுப் படப் புத்தகத்தில் ஒட்டிவை. 2. நரசிம்மவர்மர் மகாபலிபுரத்தைச் சுற்றிப் பார்ப்பதைப்போன்று ஓர் உரையாடல் நடத்தவும். 3. சேர, சோழ, பாண்டிய நாடுகளைக் குறிக்கும் படம் வரை. அதில் அவைகளின் தலைநகரங்களைக் குறிக்கவும்.

—: o :—

8. முஸ்லீம் ஆட்சி

முகம்மது-பின்-காசிம்: இவர் நம் நாட்டின்மீது முதன்முதல் படையெடுத்தவர். இவர் அரேபியா நாட்டைச் சேர்ந்த ஒரு படைத்தலைவராவார். கி.பி. 712ஆம் ஆண்டில், இவர் தலைமையில் ஓர் அரேபிய சேனை கடல் மார்க்கமாக வந்து சிந்து நதிக் கரையிலிருந்த சிந்து நாட்டை எதிர்த்துப் போரிட்டது. அந் நாட்டு மன்னரால் இந்த எதிர்ப்பைத் தாங்க முடியவில்லை. ஆகவே முகம்மது-பின்-காசிம் அந்நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டார். இவருக்குப் பிறகு வேறு பல முஸ்லீம்கள் அந்நாட்டை நூறு ஆண்டுகள் அரசாண்ட பின் அவர்களாட்சி மறைந்து போயிற்று.

அரேபியர் நம் நாட்டில் கணித சாத்திரம், தத்துவசாத்திரம், மருத்துவ முறைகள் முதலியவற்றைக் கற்றுக் கொண்டனர்.

இவர்கட்குப்பின் பல முஸ்லீம் அரசர்கள் வட இந்தியாவையும் தக்காணத்தையும் ஆண்டனர். அவர்களில் முக்கியமானவர்களான அக்பர், ஷாஜஹான் என்னும் இரு அரசர்களைப்பற்றி இங்குப் படிப்போம்.

இந்தியாவிற்கு வடமேற்கிலுள்ள **பர்காஞ** என்னும் ஒரு சிறு நாட்டிற்குப் பாபர் அரசராஞர். அப்பொழுது டில்லியை ஆண்டு வந்த **இப்ராஹிம் லோடி** என்பவரை இவர் ஒரு பெரும் படையுடன் **பாணிப்பட்டு** என்னும் இடத்தில் தோற்கடித்தார்; டில்லி இராச்சியத்தையும் கைப்பற்றினுர். இவரே மொகலாய வமிசத்தின் முதல் மன்னர். இவருக்குப்பின் ஹுமாயூனும், பின் அக்பரும் டில்லியை ஆண்டனர்.

அக்பர் : இவர் சிறு வயதிலேயே அரசராக வந்த காரணத்திஞல் இவரது தாய்மாமன் **பைராம்கான்** அரசியலை ஏற்று நடத்திவந்தார். பின்னர் கி. பி. 1562இல் பைராம்கானிடமிருந்து அரசியலைத் தானே ஏற்றுக்கொண்டார். இவர் தம் ஆட்சிக் காலத்திற்குள் பல போர்களைச் செய்து வெற்றி யடைந்தார். இராஜபுத்திரச் சிற்றரசர்கள் பலர் இவரைத் தம் தலைவராக ஒப்புக்கொண்டு சமாதானமாக இருந்து வந்தனர். ஆஞல் சித்தூரை

ஆண்ட இராணு பிரதாப்சிங் என்பவர் மட்டும் அக்பருக்கு அடிபணியவில்லை. அதனல் இவர் சித்தூரை முற்றுகையிட்டு அதைக் கைப்பற்றிக் கொண்டார்.




அக்பர்

ஆனல் இராணு பிரதாப்சிங் தப்பி அரவல்லி மலைப் பகுதிக்குச் சென்று அங்கே ஓர் இராச்சியத்தை ஏற்படுத்திக் கொண்டார். பிறகு கூர்ஜரம், வங்காளம், காஷ்மீரம், சிந்து, ஒரிஸ்ஸா முதலிய நாடுகளையும் அக்பர் வென்ருர்.

எனவே அக்பரது இராச்சியம் சாம்ராஜ்யமாயிற்று. இது வடக்கே காபூலிலிருந்து தெற்கே கோதாவரி நதிவரையிலும், கிழக்கே வங்காளத்திலிருந்து மேற்கே சிந்து இராச்சியம்வரையிலும் பரவியிருந்தது. சாம்ராஜ்யத்தைச் செவ்வனே நிர்வாகம் செய்ய வசதியாக இருக்கும்பொருட்டு, அக்பர் அதனை 15 சுபாக்களாக (மாகாணங்களாக)ப் பிரித்தார். ஒவ்வொரு சுபாவுக்கும் சுபேதார் எனப்படும் ஒரு தலைவர் இருந்தார். அவருக்கு உதவியாக மற்ருேர் அலுவலரும் இருந்தார். அவருக்குத்

திவான் எனப்பெயர். அவரது முதற் கடமை மக்களிடமிருந்து வரி வசூல் செய்வதே.



நிலச் சீர்திருததங்களில் அகபருககு உதவி யாயிருந்தவர் இராஜா தோடர்மல் என்னும்

இராஜபுத்திரராவார். அக்பர் காலத்தில் நிலங்கள் சரிவர அளக்கப்பட்டன. விளைச்சலுக்கு ஏற்றபடி விளைவில் மூன்றிலொரு பங்கு நில வரியாக வசூலிக்கப்பட்டது. அக்பருடைய இராச்சியத்தில் குற்றவாளிகளைப் பிடிக்கக் கொத்தவால்கள் என்னும் போலீஸ்காரர்களும், நியாயம் விசாரிக்கக் காஜிகள் என்னும் நீதிபதிகளும் இருந்தனர்.

அக்பர் பட்டேபூர்சிக்ரி என்னும் நகரை உருவாக்கி அதையே தம் சாம்ராஜ்யத்திற்குத் தலைநகராகவும் ஆக்கிக்கொண்டார். இந்து, பௌத்தம், ஜைனம் முதலிய எல்லா மதங்களையும் அக்பர் சமமாக மதித்து வந்தார். எனவே எல்லாச் சமயப் பெரியார்களையும் வரவழைத்து அம்மதங்களின் பொதுவான உண்மைகளைக் கேட்டு அவற்றை ஒன்றுதிரட்டித் தீன் இலாஹி என்ற ஒரு புதிய மதத்தை ஏற்படுத்தினர். ஆனால், இப்புதிய மதத்தைப் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அக்பர் இறந்தபின் அம்மதமும் மறைந்து போயிற்று.

அக்பருக்குமுன் ஆண்ட முஸ்லீம் மன்னர்கள் இந்துக்கள்மீது விதித்த ஜிஸியா என்னும் மத வரியை இவர் நீக்கினர்; பல இராஜ புத்திரப் பெண்களைத் தாமும், தம் புதல்வர்கள்,

உறவினர்கள் மணந்துகொண்டும், இந்து முஸ்லீம் ஒற்றுமையை வளர்க்க முயன்றூர்.

இவையுமன்றி இராஜாமான்சிங், இராஜா தோடர்மல், இராஜா பீர்பால், இராஜா பகவன் தாஸ் போன்ற இராஜபுத்திரர்களுக்குத் தம் அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளைக் கொடுத்தார். இதிலிருந்து அக்பர் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக உழைத்தார் என்றும், இந்துக்களை மிகவும் நேசித்தார் என்றும் தெரிகிறது. அக்பர் காலத்தில், இந்துப் பெண்கள் தங்கள் கணவன்மார்களை இழந்துவிட்டால் உடன் கட்டையேறும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதற்குச் **சககமனம்** என்று பெயர். இவர் இவ்வழக்கத்தைத் தடுக்க முயற்சிகள் செய்தார். அதனுல் இளம் வயதில் பெண்களுக்கு மணம் செய்வதைத் தடுத்தார்; விதவைகள் மறுமணம் செய்து கொள்வதை ஆதரித்தார்.

அக்பருக்குப் பிறகு அவர் மகன் ஜஹாங்கீரும், அவருக்குப்பின் அவர் மகன் ஷாஜஹானும் பட்டத்திற்கு வந்தனர். ஷாஜஹான் தம் தந்தையான ஜஹாங்கீரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். ஆனுல் கடைசியில் அவருக்குப் பணியவேண்டி வந்தது. ஜஹாங்கீருக்குப் பின் அவரது மனைவியான நூர்ஜஹான் பல

வஞ்சகச் சூழ்ச்சிகள் செய்து ஷாஜஹானை அரியணை ஏருமல் தடுத்து வந்தார். ஆனல் அவர் இந்தச் சூழ்ச்சிகளுக்கெல்லாம் தப்பி அரியணை யேறினர்.

ஷாஜஹான் பட்டத்திற்கு வந்த சமயம் மொகலாயப் பேரரசு உன்னத நிலையை அடைந்து, மிகுந்த செழிப்பாய் இருந்தது.

ஷாஜஹானபாத் என்று சொல்லப்பட்ட தற்போதைய டில்லியை இவர்தான் கட்டினர் இங்கு ஓர் அரண்மனையைக் கட்டி, அதில் இரத்தினங்களைப் பதித்த மயில் வடிவில் ஓர் அரியணையையும் அமைத்தார்.




ஷாஜஹான்

இந்த அரண்மனையைத்தான் நாம் தற்போது செங்கோட்டை என அழைக்கின்ருேம்.

இவரது மனைவி மும்தாஜ்மஹல் ஒரு சமயம் மிகுந்த நோய்வாய்ப்பட்டிருந்தாள். நோய் தீராது எனத் தெரிந்தபின் மும்தாஜ், ஷாஜஹானிடம், தான் இறந்த பிறகு அவர் மறுமணம் செய்துகொள்ளக்கூடாது எனவும்,

பல்லோராலும், பல்லாண்டுகள் புகழக்கூடிய தாகத் தனக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பும் படியும் வேண்டினாள்.

இயற்கையாகவே கலைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர் ஷாஜஹான். மேலும் பேரழகு வாய்ந்த மும்தாஜிடம் மிகுந்த பற்றுக்கொண்டிருந்தார். எனவே, அவளது வேண்டுகோளின்படியே ஆக்ராவில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பினார். அதற்குத் தம்



தாஜ்மஹால்

மனைவியின் பெயரையே இட்டு அதனைத் தாஜ் மஹால் என அழைத்தார்.

தாஜ் மஹால் முழுவதும் சலவைக் கற்களால் கட்டப்பட்டது. இந்தச் சலவைக்

கற்கள் வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப் பட்டவை. இதைக் கட்ட 20,000 ஆட்கள் தேவைப்பட்டனர் என்றும், இதைக் கட்டி முடிக்க 20 ஆண்டுகள் ஆயின என்றும் சொல்லப்படுகிறது.

இதைத் தவிர ஆக்ராவில் ஓர் அரண்மனையையும், முத்து மசூதி ஒன்றையும் கட்டினுர். அரண்மனையில் இவர் கைக்கொண்ட ஆடம்பர வாழ்க்கையைப்பற்றி இந்தியாவிற்கு வந்த பல அன்னிய நாட்டினர் வருணிக்கின்றனர். இவ்ருடைய இறுதிக் காலம் மிகப் பரிதாபமானது. இவர் மைந்தரான ஔரங்கசீப் கலகம் செய்து இவரை ஆக்ராவில் சிறையிலிட்டுவிட்டு, தாம் பட்டத்திற்கு வந்தார். சிறையில் துன்பப் பட்ட ஷாஜஹான் தமது இறுதிக் காலத்தில் தாம் கட்டிய தாஜ்மஹாலேச் சிறையிலிருந்து பார்த்தவண்ணமே உயிர் நீத்தார். ஔரங்கசீபிற்குப்பின் மொகலாய சாம்ராஜ்யம் சிதைவுற்றது.

விளுக்கள்

1. *நம் நாட்டின்மீது முதன்முதலில் படையெடுத்த அரேபியர் யார்? அவர் எந்த ஆண்டு படையெடுத்து வந்தார்?*
2. *அரேபியர்கள் நம் நாட்டினின்றும் கற்றுக்கொண்டவை யாவை?*

3. அக்பர் யாருடைய பேரர்? இவர் எந்த ஆண்டு யாரிடமிருந்து அரசியலை ஏற்றுக்கொண்டார்?

4. அக்பர் இராச்சியம் எதுவரை பரவியிருந்தது? அதை அவர் எத்தனை சுபாக்களாகப் பிரித்திருந் தார்? சுபாக்கள் என்றால் என்ன?

5. தாஜ் மஹாலைக் கட்டியது யார்? அது யார் நினை வாகக் கட்டப்பட்டது?

6. ஷாஜஹானின் இறுதிக் காலத்தை விவரி.

பயிற்சி: 1. உன் ஊருக்கு அருகிலுள்ள சரித்திர சம்பந் தப்பட்ட முக்கிய இடங்களுக்குச் சென்று குறிப்புக்கள் எடுத்துவரவும். 2. ஷாஜஹான் கட்டிய தாஜ் மஹால், முத்து மசூதி ஆகியவைகளின் படங்களைச் சேகரிக்கவும்.

—:) : —

9. ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருகை


பழங்காலம் முதலே நம் நாட்டிற்கும் ஐரோப்பாவிற்குமிடையே வர்த்தகம் பெரு மளவில் நடைபெற்று வந்தது. ஆனால் இவ் வர்த்தகம் பெரும்பாலும் தரை மார்க்கமாகவே நடைபெற்று வந்தது. பல ஐரோப்பிய நாட் டினர் நமது நாட்டிற்குக் கடல் வழியாகவும் ஒரு மார்க்கம் கண்டுபிடிப்பதில் முனைந்தனர். அதில் முதலில் வெற்றி பெற்றவர்கள் போர்த்துகீசியர்களே.

போர்த்துகீசியர்கள் : போர்த்துகல் என்பது ஐரோப்பாவிலுள்ள ஒரு சிறு நாடு. போர்த்துகீசிய மாலுமிகளில் ஒருவரான **வாஸ் கோ-ட-காமா** என்பவர் ஐரோப்பாவிற்கும் நம் நாட்டிற்கும் இடையே ஒரு கடல் வழியைக் கண்டுபிடித்தார். அது முதல் போர்த்துகீசியர்கள் நம் நாட்டுடன் வர்த்தகம் செய்யத் தொடங்கினர். கோவா, டையூ, டாமன் என்னும் இடங்களில் பண்டகசாலைகளை அமைத்துக்கொண்டு நம் நாட்டுடன் வர்த்தகம் செய்து திரண்ட பொருளைச் சேர்த்தனர். பின்னர் வந்த மற்ற ஐரோப்பிய நாட்டினருடன் போர்த்துகீசியர் போட்டியிட முடியாமல் போய்விட்டது. ஆகையால் போர்த்துகீசியர் நம் நாட்டில் அதிகம் பரவ முடியவில்லை. முன்னர் போர்த்துகீசியரிடமிருந்த கோவா, டையூ, டாமன் இம்மூன்று இடங்களும் தற்பொழுது இந்தியாவுடன் இணைக்கப்பட்டு விட்டன.



வாஸ்கோ-ட-காமா

டச்சுக்காரர்கள் : போர்த்துகீசியர்களுக்குப் பிறகு, நம் நாட்டுடன் வர்த்தகம்


ஐரோப்பிய வர்த்தகத் தலங்கள்
485
சந்திரநாகூர் (பிரெஞ்சு)
கல்கத்தா (ஆங்கிலேயர்)
சூரத் (ஆங்கிலேயர்)
டாமன் (போர்ச்சு)
டையூ (போர்ச்சு)
பஸ்ஸின் (போர்ச்சு)
பம்பாய் (ஆங்கிலேயர்)
கோவா (போர்ச்சு)
அரபிக் கடல்
புலிகட் (டச்சு)
மதராஸ் (ஆங்கிலேயர்)
சதுரங்கப்பட்டணம் (டச்சு)
புதுச்சேரி (பிரெஞ்சு)
காரைக்கால் (பிரெஞ்சு)
நாகப்பட்டினம் (டச்சு)
கொச்சி (டச்சு)
வங்காள விரிகுடா
வ
இலங்கை
இந்து சமுத்திரம்

செய்தவர்கள் டச்சுக்காரர்கள். இவர்களும் ஐரோப்பிய நாட்டினரே. இவர்கள் பழவேற்காடு, மச்சிலிப்பட்டினம், நாகப்பட்டினம் முதலிய இடங்களில் தங்கள் வர்த்தகத் தலங்களை ஏற்படுத்திக் கொண்டனர். பின்னர் இந்தியாவைவிட்டுக் கிழக்கு இந்தியத் தீவுகளுக்குச் சென்று அங்கே தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். டச்சுக்காரர்கள் இந்தியாவைவிட்டுச் செல்லும்பொழுது, தங்கள் வசமிருந்த, மேற்கூறப்பட்டுள்ள இடங்களை ஆங்கிலேயரிடம் கொடுத்தனர்.

வினாக்கள்

1. பண்டைநாளில் நம் நாட்டிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் எவ்வழியாக வர்த்தகம் நடந்தது ?
2. நம் நாட்டிற்கும் ஐரோப்பிய நாட்டிற்கும் இடையே கடல் வழியைக் கண்டுபிடித்தவர் யார் ?
3. போர்த்துகீசியருக்குச் சொந்தமாக நம் நாட்டில் இருந்த இடங்கள் எவை ?
4. டச்சுக்காரர்கள் நம் நாட்டில் எவ்விடங்களில் வர்த்தகத் தலங்களை ஏற்படுத்தினர் ?
5. இந்தியாவை விட்டுச் சென்றபின் டச்சுக்காரர்கள் தங்கள் ஆதிக்கத்தை எங்கு ஏற்படுத்திக் கொண்டனர் ?
6. டச்சுக்காரர்கள் தங்கள் வசமிருந்த வர்த்தகத் தலங்களை யாரிடம் கொடுத்துச் சென்றனர் ?

பயிற்சி : *1.* இந்தியா படத்தில் நம் நாட்டிற்கு வந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் தங்கள் பண்டகசாலைகளை ஏற்படுத்திக்கொண்ட இடங்களைக் குறி. *2.* உங்களூருக்குச் சமீபத்திலுள்ள ஏதேனும் ஒன்றிரண்டு வர்த்தகத் தலங்களுக்குச் சென்று அங்கு அவர்கள் பண்டகசாலைகளை ஏற்படுத்திய முறையையும், அதைப் பரப்பிய முறையையும் கேட்டு அறிந்துகொள்.

—:o:—


10. ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும்

ஆங்கிலேயர்கள் : போர்த்துகீசியர், டச்சுக்காரர் இவர்களைப்போலவே இங்கிலாந்திலிருந்தும் வர்த்தகம் செய்யும் நோக்கத்துடன் சிலர் நம் நாட்டிற்கு வந்தனர். இவர்கள் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களாதலால் இவர்கள் ஆங்கிலேயர் என அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் 1600ஆம் ஆண்டு **கிழக்கு இந்தியக் கம்பெனி** என்ற ஒரு வர்த்தகச் சங்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

இக்கம்பெனியார் இந்தியாவில் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் தங்கள் வர்த்தகத் தலங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இக்கிழக்கிந்தியக் கம்பெனியார் முதலில் இந்தியாவில் மேற்குக் கடற்கரை ஓரத்திலுள்ள சூரத் என்னுமிடத்திலும் கிழக்குக் கடற்கரையில் மச்சிலிப்பட்டினம் என்னும் இடத்திலும் தங்கள் பண்டகசாலைகளை ஏற்படுத்தினர்.

பின் சர் பிரான்சிஸ் டே என்னும் ஆங்கிலேயர் சந்திரகிரி மன்னரான சென்னப்ப



செயின்ட் ஜார்ஜ் கோட்டை - சென்னை
(*Courtesy, Dept. of Archaeology*)

நாயக்கரிடமிருந்து சென்னையை விலைக்கு வாங்கினர். அப்பொழுது சென்னை மிகவும் சிறிய

ஊராக இருந்தது. அங்கே ஒரு கோட்டையைக் கட்டினார். அதற்குச் **செயின்ட் ஜார்ஜ் கோட்டை** என்று பெயரிடப்பட்டது. பின்னர் வங்காளத்தில் ஹூக்ளி நதிக்கரையில் **காளி கட்டம்** என்னும் ஊரை வாங்கிக் கம்பெனியார் அங்கும் ஒரு கோட்டையைக் கட்டினர். அதற்கு **வில்லியம் கோட்டை** என்று பெயர். பம்பாயிலும் இந்தக் கிழக்கு இந்தியக் கம்பெனியார் ஒரு வர்த்தகத் தலத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

பிரெஞ்சுக்காரர்கள் : பிரான்சு நாட்டினின்றும் சில வியாபாரிகள் இந்தியாவிற்கு வந்தனர். இவர்களும் ஆங்கிலேயர் போலவே வர்த்தகம் செய்யும் நோக்கத்துடன் வந்தவர்களே. இவர்கள் **பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி** என்றவொரு வியாபாரச் சங்கத்தை 1664இல் ஏற்படுத்தி நம் நாட்டுடன் வர்த்தகம் செய்ய ஆரம்பித்தனர். காரைக்கால், சந்திர நாகூர், புதுச்சேரி, மாஹி ஆகிய இடங்களில் பண்டகசாலைகளை ஏற்படுத்திக் கொண்டனர். இந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் வர்த்தகத்தில் போட்டி ஏற்பட்டது.

வினாக்கள்

1. நம் நாட்டிற்கு வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் வந்தவர்கள் யார் யார் ?

2. கிழக்கு இந்தியக் கம்பெனியார் எங்கெங்குத் தங்கள் பண்டகசாலைகளை ஏற்படுத்திக் கொண்டனர் ?

3. சென்னையை யார், யாரிடமிருந்து விலைக்கு வாங்கினார் ?

4. செயின்ட் ஜார்ஜ் கோட்டை, வில்லியம் கோட்டை இவை எவ்விடங்களில் உள்ளன ?

5. பிரெஞ்சுக்காரர்கள் எவ்விடங்களில் தங்கள் பண்டகசாலைகளை ஏற்படுத்திக் கொண்டனர் ?

6. அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட வர்த்தகச் சங்கத்தின் பெயர் என்ன ?

பயிற்சி : 1. செயின்ட் ஜார்ஜ் கோட்டை, வில்லியம் கோட்டை ஆகியவற்றின் படங்களைச் சேகரி. 2. மற்றும் பண்டகசாலைகளின் இடங்களை இந்தியா படத்தில் குறி.

—: o :—

11. ராபர்ட் கிளைவ்

ராபர்ட் கிளைவ் : இவர் இளமையில் மிகவும் குறும்புத்தனம் உள்ளவர். இவரால் ஏற்பட்ட இன்னல்களைப் பொறுக்கமுடியாமல் இவர் தகப்பனர் இவரை ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனியில் பணியாற்ற இந்தியாவிற்கு அனுப்பிவிட்டார். இவர் இந்தக் கம்பெனியில் முதலில் ஓர் அலுவலராகப் பணியாற்றினர். இவ்வாறு அலுவலராகப் பணியாற்றுவது இவருக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் இவர் இக் கம்பெனியின் இராணுவத்தில் சேர்ந்து கொண்டார். பின்னர் தம் திறமையைக் காட்டி மேலதிகாரிகளிடம் நன்மதிப்பைப் பெற்ருர்.



ராபர்ட் கிளைவ்

கிளைவ் இந்தியாவுக்கு வந்தபோது ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் வர்த்தகத்தில் பெரும் போட்டி ஏற்பட்டது.

மொகலாயப் பேரரசு அழிந்தபின் தென்னிந்தியா சிறுசிறு சிற்றரசுகளாகச் சிதைந்தது. இந்தச் சிற்றரசுகள் அவைகளுக்குள் ஒற்றுமையின்றி ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டன. அச்சண்டைகளினுல் அவை வலிமை குன்றியிருந்தன.

அவைகளின் வலிமைக் குறைவைப் பயன்படுத்திக்கொண்டு பிரெஞ்சு ஆதிக்கத்தைத் தென்னிந்தியாவில் நிறுவிவிடலாம் எனப் பாண்டிச்சேரியி லிருந்த டுப்ளே என்ற பிரெஞ்சுக் கவர்னர் எண்ணிஞர். தம் எண்ணப் படியே அந்தச் சிற்றரசுகளின் உள் விவகாரங்களில் அவர் தலையிடலாஞர்.

வலிமைக் குறைவு அடைந்திருந்த இச் சிற்றரசுகளில் ஒன்ருன தக்காணம், நிஜாம் என்ற பட்டம் கொண்ட ஒரு முஸ்லீம் அரசரின் கீழிருந்தது. இவருக்குக் கீழ்ப்பட்ட கர்நாடகம் என்ற பகுதியை 'நவாப்' என்று பட்டம் கொண்ட ஒரு முஸ்லீம் சிற்றரசர் ஆண்டு வந்தார். இந்தக் கர்நாடகம் தென்னிந்தியாவின் பெரும்பகுதியைக் கொண்டிருந்தது.

இச்சமயத்தில் ஐரோப்பாவில் இங்கிலாந்தும், பிரான்சும் போர் செய்து வந்தன. இந்தியாவிலும் டுப்ளே கி.பி. 1740இல் ஆங்கி

லேயர்களைத் தாக்கிச் சென்னையைக் கைப் பற்றிக்கொண்டார். ஆங்கிலேயர் வேறு வழி யின்றிக் கர்நாடக நவாபின் உதவியை நாடி னர். அவர் சென்னையை மீட்க ஒரு படையை அனுப்பி உதவினுர். ஆயினும் டூப்ளே அப் படையை எளிதில் வென்றுவிட்டார்.

இச்சமயம் ஐரோப்பாவில் ஆங்கிலேய ருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போரில் சமா தானம் ஏற்பட்டது. எனவே இந்தியாவிலும், ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் சமாதானம் செய்து கொண்டனர். இதன் விளைவாக, சென்னை ஆங்கிலேயருக்கே திருப்பிக் கொடுக் கப்பட்டது.

பின்னர், கர்நாடகத்தில் நவாப் பதவிக் காக உரிமைப் போட்டி ஏற்பட்டது. இதில் டூப்ளே தலையிட்டு, **சந்தா சாகிப்** என்பவரைக் கர்நாடக நவாப் ஆக்கினுர். இவரது ஆதர வினுல் ஆங்கிலேயரைக் கர்நாடகத்தினின்றும் விரட்டவும் எண்ணினுர். இதைத் தவிர்க்க ஆங்கிலேயரும் இந்தியச் சிற்றரசர்களின் விவகாரங்களில் தலையிட்டனர்.

கர்நாடக நவாப் பதவிக்குப் போட்டியிட்ட வர்களில் மற்ருெருவரான அன்வருடீன் கொல்லப்பட்டார். அவருடைய மகன் **மகமது**

அலி என்பவர் திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் பயந்து ஒளிந்து கொண்டார். அதனுல் சந்தா சாகிப் தம் படைகளுடன் சென்று திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார். அச்சமயம் மகமது அலி ஆங்கிலேயர்களே உதவிக்கு அழைத்தார்.

'மகமது அலியின் வேண்டுகோளின்படி ஆங்கிலேயர் அவரது உதவிக்குச் சென்று ஆற்காட்டை முற்றுகையிட வேண்டும். அப்பொழுது சந்தா சாகிப் தம் தலைநகரைக் காக்க, திருச்சி முற்றுகையைக் கைவிட்டு வருவார். அப்பொழுது மகமது அலி, திருச்சிக் கோட்டையைவிட்டு வெளிவரலாம்' எனச் சென்னைக் கவர்னரிடம் கிளைவ் தெரிவித்தார். அவரும் அதை ஆமோதித்தார்.

அதன்படி கி. பி. 1751இல் கிளைவ் தலைமையில் ஒரு படை ஆற்காட்டை முற்றுகையிட்டது. கிளைவ் கூறியபடியே சந்தா சாகிப் திருச்சி முற்றுகையைக் கைவிட்டு ஆற்காட்டிற்கு விரைந்தார். முற்றுகையிலிருந்து தப்பிய மகமது அலி ஆங்கிலேயரின் உதவியுடன் சந்தா சாகிபை வென்று கர்நாடகத்தைக் கைப்பற்றினுர். இந்த வெற்றிக்குப்பின் ஆங்கிலேயரின் செல்வாக்கு

உயர்ந்தது. தென்னிந்தியாவில் பிரெஞ்சுக் காரரின் ஆதிக்கத்தை நிலைநிறுத்திவிடலாம் என்ற டூப்ளேயின் எண்ணம் வீணாயிற்று. கிளைவ் 'ஆற்காட்டு வீரர்' என்ற பட்டமும் பெற்றார்.

கர்நாடகப் போருக்குப் பின்னர் தென்னிந்தியாவில் ஆங்கிலேயரின் வர்த்தகமும், செல்வாக்கும் பெருகின. பின்னர் வங்காளத்திலும் ஆங்கிலேயரின் செல்வாக்கு வளர்வதற்குச் சூழ்நிலை ஏற்பட்டது. வங்காளத்தில் நவாபாக இருந்த சிராஜ்-உத்-தௌலா என்பவர் ஆங்கிலேயருக்கு விரோதமாக இருந்தார். ஆங்கிலேயரில் சிலரைச் சிறையிலுமிட்டார். அதனால் ஆங்கிலக் கம்பெனி நவாபுடன் போர் தொடுத்தது. கிளைவ் ஒரு படையுடன் வங்காளத்திற்கு அனுப்பப்பட்டார். கிளைவ் நவாபை 1757இல் பிளாசி என்னுமிடத்தில் தோற்கடித்து அவருடைய தளகர்த்தராகிய மீர்ஜாபரை வங்காள நவாபாக்கினார். தமக்குச் செய்த உதவிக்காக மீர்ஜாபர் ஆங்கிலேயருக்கு 'இருபத்து நான்கு பர்கானாக்கள்' என்ற பிரதேசத்தைக் கொடுத்தார்.

மீர்ஜாபருக்குப்பின் மீர்காசிம் வங்காள நவாப் ஆனார். இவரும் ஆங்கிலேயருக்கு

விரோதமாக எழுந்தார். ஆனால் இவர் 1764இல் **பக்சார்** என்னுமிடத்தில் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டார்.

1765இல் கிளேவ் வங்காளக் கவர்னராக நியமிக்கப்பட்டார். அவர் 1765இல் **அலகாபாத்தில்** மொகலாயச் சக்கரவர்த்தியுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா ஆகிய மாகாணங்களில் **திவானி** என்ற வரி வசூல் உரிமையை ஆங்கிலேயர்கள் பெற்றனர். இதனால் வங்காளத்தில் **இரட்டை ஆட்சி** ஏற்பட்டது. இராணுவம், நிதி ஆகியவற்றை ஆங்கிலேயர்களும்,மற்ற அலுவல்களை நவாபும் கவனித்தனர். கம்பெனி நிர்வாக ஊழல்களைக் கிளேவ் சீர்திருத்தினர். 1767இல் கிளேவ் இங்கிலாந்துக்குத் திரும்பினர். அவருக்குப் 'பிரபு' பட்டம் அளிக்கப்பட்டது. இந்தியாவில் ஆங்கிலப் பேரரசு அமைப்பதற்கு அடிகோலியவர் **ராபர்ட் கிளேவே** ஆவார்.

வினக்கள்

1. *சந்தா சாகிப் எவ்வாறு கர்நாடக நவாப் ஆனர் ?*
2. *ஆங்கிலேயர் மகமது அலிக்கு எவ்வாறு உதவினர் ?*
3. *கிளைவ் ஏன் ஆற்காட்டு வீரர் என்று அழைக்கப் பட்டார் ?*

4. ஆங்கில ஆதிக்கம் எவ்வாறு வங்காளத்தில் நிறுவப் பட்டது?

5. குறிப்பு எழுதுக: 1. பிளாசிச் சண்டை 2. இரட்டை யாட்சி 3. அலகாபாத் உடன்படிக்கை.

பயிற்சி: 1. சந்தா சாகிப், மகமது அலி இவர்களைப் பற்றிய குறிப்புக்களைச் சேகரிக்கவும். 2. இவர்களின் படங் களையும், இவர்களைச் சார்ந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் படங்களையும் சேகரித்து ஒட்டுப் படப் புத்தகத்தில் ஒட்டிவைக்கவும்.

—: o :—

12. ஆங்கில ஆதிக்கத்தின் வளர்ச்சி

கிளைவ் நிறுவிய ஆங்கில இராச்சியம் நாளடைவில் வளர்ச்சியடைந்து, 1857ஆம் ஆண்டுக்குள் இந்தியா முழுவதும் ஒரு பேரர சாகப் பரவியது. ஆங்கிலப் பேரரசை இந்தி யாவில் வளரச் செய்த முக்கியமான கவர்னர்-ஜெனரல்கள் **வெல்லெஸ்லி பிரபு, ஹேஸ்டிங்ஸ் பிரபு, டல்ஹௌஸி பிரபு** ஆகியவர்களாவர்.

வெல்லெஸ்லி காலத்தில் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கும், பலமும் அதிகமாக இருந்தன. அப்போது பிரெஞ்சுப் பேரரசை **நெப்போலியன்** என்ற சிறந்த தளகர்த்தர் ஆட்சி செய்து வந்தார். ஆங்கிலேயர்களின் அதிகாரத்தை வளரச் செய்ய வெல்லெஸ்லி **துணைப்படைத்**

திட்டத்தை வகுத்தார். அதன்படி சுதேச மன்னர்கள் தங்கள் இராச்சியத்தில் ஓர் ஆங்கிலேயப் படையை வைத்துக் கொள்ள வேண்டும். அப்படையின் செலவை அம் மன்னர்களே ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். அவர்கள் தங்கள் இராச்சியத்தில் ஓர் ஆங்கில ஸ்தானிகரை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆங்கிலேயரைத் தவிர வேறு எந்த ஐரோப்பியர்களுடனும் அவர்கள் எவ்வித உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது.




வெல்லெஸ்லி பிரபு

துணைப்படைத் திட்டத்தை முதன்முதலில் ஏற்றுக்கொண்டவர் நிஜாம் மன்னர் ஆவார். இவர் பல்லாரி, கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் ஆகிய ஜில்லாக்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். அவற்றிற்குக் கொடை ஜில்லாக்கள் என்று பெயர்.

துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மைசூரையாண்ட திப்புவும், மகாராஷ்

டிரத் தலைவர்களில் சிலரும் மறுத்தனர். வெல்லெஸ்லி திப்புவுடன் நான்காம் மைசூர்ப்



போரும், மகாராஷ்டிரர்களுடன் இரண்டு போர்களும் நடத்தி வெற்றி கண்டார். அவர்


1805இல் இந்தியாவை விட்டுப் போகும்போது சென்னை இராஜதானி, அயோத்தியின் ஒரு பகுதி ஆகியவற்றை ஆங்கிலப் பேரரசுடன் சேர்த்திருந்தார்.

வெல்லெஸ்லிக்குப்பின் வந்த முக்கியக் கவர்னர்-ஜெனரல் **ஹேஸ்டிங்ஸ் பிரபு** ஆவார். இவர் மகாராஷ்டிரர்களை முறியடித்துப் **பம்பாய் இராஜதானியை** உருவாக்கி, ஆங்கிலப் பேரரசுடன் சேர்த்துக் கொண்டார்.

ஹேஸ்டிங்ஸுக்குப் பின் வந்த கவர்னர்-ஜெனரல்களில் குறிப்பிடத் தக்கவர் **டல்ஹௌஸி பிரபு** ஆவார். இவர் **அவகாசியிலிக் கொள்கையை** வகுத்தார். அதன்படி சந்ததியில்லாத சுதேச மன்னர்கள் புத்திர சுவீகாரம் செய்து கொள்ளக் கூடாது. சந்ததியில்லாத இராச்சியங்களை அவர் ஆங்கிலப் பேரரசுடன் சேர்த்துக்கொண்டார். இவ்வாறு **சதாரா,**



டல்ஹௌஸி பிரபு


டல்ஹௌஸி காலத்து இந்தியா
ஆப்கனிஸ்தானம்
காஷ்மீர்
பஞ்சாப்
திபெத்து
நேபாளம்
ராஜபுதனம்
அயோத்தி
சிந்து
பீஹார்
அஸ்ஸாம்
கட்ச்
குஜராத்
வங்காளம்
டையூ(போ)
நாகபுரி
பம்பாய்
நிஜாம்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
கோவா (போ)
மைசூர்
சென்னை
மாஹி (பி)
பாண்டிச்சேரி(பி)
காரைக்கால்(பி)
கொச்சி
இலங்கை
வ
0 485கி.மீ.
இந்து சமுத்திரம்

நாகபுரி, ஜான்சி என்பவை சேர்த்துக்கொள்ளப்பட்டன. அவர் போர்கள் தொடுத்துச் சீக்கியரிடமிருந்து பஞ்சாபையும், பர்மியரிடமிருந்து கிழக்குப் பர்மாவையும் பெற்ருர். அவர் இந்தியாவை விட்டுப் போகும்போது இந்தியா முழுவதும் ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது.

வினுக்கள்

1. ஆங்கிலப் பேரரசை இந்தியாவில் நிறுவிய மூன்று முக்கியமான கவர்னர்-ஜெனரல்கள் யார் யார்?
2. துணைப்படைத் திட்டத்தை வகுத்தவர் யார்? அதன் கொள்கைகள் யாவை?
3. துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் சுதேச மன்னர் யார்? அவர் ஆங்கிலேயருக்கு அளித்த ஜில்லாக்கள் யாவை?
4. டல்ஹௌஸி பிரபு வகுத்த கொள்கை யாது? அதன் நோக்கம் யாது?

பயிற்சி: 1. வெல்லெஸ்லி காலத்து இந்தியா படம் வரை. 2. டல்ஹௌஸி காலத்தில் இந்தியா இருந்த நிலைமையை விளக்க ஒரு படம் வரை.

—: o :—

13. நமது சுதந்திரப் போராட்டம்

பல ஆண்டுகள் நாம் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் வாழ்ந்து வந்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஆங்கிலேய ஆட்சியினுல் நமக்குப் பல தீமைகள் ஏற்பட்டிருந்தாலும் நன்மைகளும் பல ஏற்பட்டன. நாட்டில் ஒரேமாதிரியான ஆட்சி ஏற்பட்டது. அந்நியர் படையெடுப்புப் பயம் நீங்கியது. ஆங்கிலக் கல்வி பரவியது. இதனுல் நாட்டிற்கு ஒரு பொதுமொழி ஏற்பட்டது. ஆங்கிலம் கற்ற பலர் இங்கிலாந்து சென்று வந்தனர். அங்கு மக்கள் ஆட்சி நடைபெறுவதைக் கண்டனர். அதைப்போலவே நமது நாட்டிலும் மக்கள் ஆட்சி நடைபெற வேண்டுமென்று விரும்பினர். இதன் விளைவாக ஆங்கிலேயர் ஆட்சியினின்றும் நம் நாடு விடுதலை பெறவேண்டுமெனப் பாடுபடலாயினர்.

தனிப்பட்ட ஆங்கிலேயர் சிலர் இந்தியர்களை அலட்சியப் படுத்தியதை இந்தியர்கள் மிக வெறுத்தனர். பெரும் பதவிகளை ஆங்கிலேயர் தாமே வகித்தது இந்தியர் மனத்தை வருத்தியது. மேலும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப ஆங்கிலேயர்கள் முயலுகிருர்கள் என்ற ஓர் எண்ணம் இந்துக்களையும், முஸ்லீம்களையும் கோபத்திற்குள்ளாக்கியது.

இதன் விளைவாகப் பீஷ்வா வமிசத்தைச் சேர்ந்த நாஞசாகிப் என்பவர் பீஷ்வா பதவியைத் திரும்பவும் அடைய எண்ணினுர். இதேபோல டில்லியில் பெயரளவில் அரசராக இருந்த மொகலாய வமிசத்தைச் சேர்ந்த பகதூர்ஷா என்பவர் மொகலாய இராச்சியத்தை மீண்டும் நிலைநாட்ட எண்ணினுர்.

மேலும் டல்ஹௌஸி பிரபு என்ற கவர்னர்-ஜெனரல், சந்ததியற்ற இந்து அரசர்கள் சுவீகாரம் செய்துகொண்ட புத்திரர்கள் அரசுரிமை பெறுவதைத் தடுத்தார். இதனுல் ஜான்சி போன்ற சில இராச்சியங்கள் ஆங்கிலேயர் வசமாயின. ஜான்சி அரசியான இலட்சுமியாய் போன்றவர்கள் இதனுல் மனம் கொதித்தனர்.

இந்தக் கொந்தளிப்பால் 1857இல் சுதந்திரப் புரட்சி ஏற்பட்டது. ஆங்கிலேய இராணுவத்திலுள்ள சிப்பாய்களில் பெரும் பகுதியினரும் இதில் சேர்ந்து கொண்டனர்.

இப்புரட்சி முதலில் மீரட் என்ற இடத்தில் ஆரம்பித்தது. பின் பல இடங்களுக்கும் இது பரவியது. கான்பூர் என்னுமிடத்தில் ஆங்கிலேய இராணுவத்தினர் சிலர் புரட்சி தலைவர்களில் ஒருவரான நாஞசாகிப் என்பவரிடம்

சரணடைந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். பின்பு இந்த ஒப்பந்தத்தை ஆங்கிலேயர் மீறியதாகச் சந்தேகம்கொண்ட நாஞசாகிப் சரணடைந்த ஆங்கிலேயக் கைதிகளில் பலரைக் கொன்றார். இதனால் வெகுண்ட ஆங்கிலேயர் இங்கிலாந்திலிருந்து படைகளை வரவழைத்து, பல நிரபராதிகளைக் கொடுமையாக வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். இங்கிலாந்தினின்றும் ஆங்கிலேயப் படைகள் வரவழைக்கப் பட்டதால் ஆங்கிலேயே இராணுவத்தின் வலிமை ஓங்கியது. இராணி இலட்சுமிபாய் அஞ்சா நெஞ்சத்துடன் ஆங்கிலேயருடன் போரிட்டு வீர மரணமடைந்தாள்.

பின் ஆங்கிலேயர் பகதூர்ஷாவின் இரு குமாரர்களையும் சுட்டுக்கொன்றுவிட்டு, பகதூர் ஷாவைப் பர்மாவில் சிறையிலிட்டனர். நாஞசாகிப் தலைமறைவாகி ஓடிவிட்டார். இவ்விதம் ஆங்கிலேயர் புரட்சியை அடக்கிவிட்டார்கள். இந்தப் புரட்சி தோற்றுப்போனதற்கு முக்கியக் காரணங்கள் பல. அவைகளில் சில : நமது நாட்டில் அச்சமயம் தேசீய உணர்ச்சி நன்கு பரவவில்லை ; மேலும் சில இடங்களைத்தவிர மற்ற இடங்களில் பொதுமக்கள் கலகத்தில் கலந்து கொள்ளவில்லை. பல மாகாணங்களில் இருந்த சிப்பாய்கள் புரட்சியில் கலந்து

கொள்ளவில்லை; தவிரவும், பல சிற்றரசர்கள் ஆங்கிலேயருக்கு உதவியும் அளித்தனர்.

சுதந்திரப் புரட்சி அடக்கப்பட்டபின், கிழக்கு இந்தியக் கம்பெனியிடமிருந்து இந்திய ஆட்சி அப்பொழுது இங்கிலாந்தை ஆண்டு வந்த **விக்டோரியா மகாராணியார்** ஏற்றுக் கொண்டார். அத்துடன் ஒரு சாசனத்தையும் வெளியிட்டார். ஆங்கில அரசாங்கம் இந்தியாவில் மத சம்பந்தமாகத் தலையிடாது; இந்திய அரசர்களின் சுவீகாரபுத்திர வார்சுரிமை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அச் சாசனத்தின்மூலம் உறுதிமொழி அளித்தார்.

மேலும், சாசனப்படி இந்தியக் கவர்னர்-ஜெனரல்கள் வைஸராய்கள் என்றழைக்கப் பட்டனர். இந்தியா கி. பி. 1947 வரை இவ் வைஸ்ராய்களின் ஆட்சியில் இருந்து வந்தது.

பொது மக்களிடம் தேசீய உணர்ச்சி பரவவே 1885இல் **இந்தியத் தேசீய காங்கிரஸ்** என்னும் மகாசபை நிறுவப்பட்டது. இச்சபை நாளடைவில் மிகவும் வலுவடைந்தது. மகாத்மா காந்தியின் தலைமையில் இச்சபை சுதந்திரத்திற்காகப் போராடியது. அதன் விளைவாக நம் பாரத தேசம் 1947இல் ஆங்கில ஆட்சி நீங்கிச் சுதந்திரம் பெற்றது.

வினுக்கள்

1. ஆங்கிலேய ஆட்சியின்கீழ் நாம் இருந்தாமையால் நமக்கு ஏற்பட்ட நன்மைகள் யாவை ?

2. சுதந்திரப் புரட்சி ஏற்படக் காரணங்கள் யாவை ? இது எந்த ஆண்டில், எந்த இடத்தில் ஆரம்ப மாயிற்று ?

3. நாஞ சாகிப் ஆங்கிலேயக் கைதிகளேக் கொல்லவும், ஜான்ஸி இராணி ஆங்கிலேயர்களுடன் போரிடவும் காரணங்கள் யாவை ?

4. சுதந்திரப் புரட்சி தோற்றுப்போனதற்குக் காரணங்கள் யாவை ?

5. விக்டோரியா மகாராணியார் வெளியிட்ட சாசனத் தின் உறுதிமொழிகள் யாவை ?

6. இந்தியத் தேசீய காங்கிரஸ் எப்பொழுது நிறுவப் பட்டது? அது யார் தலைமையில் எதற்காகப் போராடியது ? அதன் முடிவு என்ன?

பயிற்சி : 1. சுதந்திரப் புரட்சியில் கலகத்தில் பங்கு கொண்ட முக்கியமான தலைவர்களின் வாழ்க்கையைப் பற்றிய குறிப்புக்கள் எழுது. அவர்களின் படங்களேச் சேகரி. 2. நமது சுதந்திரத்திற்குப் பாடுபட்ட மகாத்மா காந்தியடிகள் போன்ற தலைவர்களின் படங்களேச் சேகரித்து உனது ஒட்டுப் படப் புத்தகத்தில் ஒட்டிவை.

—: o :—

சென்னை மாவட்டம்

1. சங்க காலச் சென்னை

சென்னைப்பற்றிய பழங்கால வரலாறு சரியாகத் தெரியவில்லை. ஆனாலும் இது தமிழ் நாட்டின் ஒரு பகுதியாயிருந்தது என்பது மட்டும் நிச்சயம். கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளில் தமிழ் நாடு இருந்த நிலைமை குறித்துச் சங்கநூல்கள் என்பவைகளி லிருந்து அறிகிறோம். மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததாகவும் அது கவிகளின் நூல்களைப் பரிசீலனை செய்து அவைகளில் தகுந்த நூல்களுக்கு மதிப்புக் கொடுத்ததாகவும் அறிகிறோம். இந்தச் சங்ககால நூல்கள் பல உள்ளன. அவைகளினின்று அக் காலத்திய தமிழ் நாட்டின் நிலைமை ஓரளவு புலனு கிறது. இந்தச் சங்க காலம் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகள் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அக்காலத்தில் தமிழ் நாட்டின் தெற்கில் சில பகுதி களைப் பாண்டியர்கள் என்ற அரச வமிசத்தினர் ஆண்டு வந்தனர். வடக்குப் பகுதியை சோழ அரசர்கள் ஆண்டார்கள். எஞ்சிய பகுதியில் பெரும் பாகம் சேர அரசர்கள் வசம் இருந்தது. வங்காள விரிகுடாவின் கரையில் உள்ள பழவேற்காடு முதல் மதுரைவரை உள்ள நிலப்பகுதி பொதுவாகச் சோழ அரசர்கள் வசம் இருந்தது. ஆகையால் சென்னையும் இப்பகுதிக்குள் அடங்கியது எனலாம். இந்தச் சோழ நாட்டின் வடபகுதி பிற்காலத்தில் தொண்டை மண் டலம் என வழங்கப்பட்டது. சங்க காலத்தில் திருக் குறள் என்னும் அரிய தமிழ் நூலைச் செய்தருளிய

திருவள்ளுவர் என்னும் தெய்வப் புலவர் தமது வாழ்க்கையில் சிலகாலம் மயிலாப்பூரில் வசித்தார் என்று கூறப்படுகிறது. இன்றுகூடத் திருவள்ளுவர் கோயில் ஒன்றை மயிலாப்பூரில் காணலாம்.

வினாக்கள்


1. சங்க நூல்களிலிருந்து நாம் எவைகளை அறிகிறோம்?
2. சங்க காலம் என அறிஞர்கள் எக்காலத்தைக் கூறுகிறார்கள்?
3. சங்க காலத்தில் சோழ அரசர்கள் வசம் இருந்த பகுதி யாது?
4. தொண்டை மண்டலம் என எதனை வழங்கினர்?
5. திருக்குறளை இயற்றியவர் யார்? அவர் எங்கு வாழ்ந்தார்? அதற்கு ஆதாரம் உண்டா?

பயிற்சி: 1. சங்க கால நூல்களில் சிலவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள். 2. மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் ஆலயத்துக்குச் சென்று அங்குள்ள திருவள்ளுவர் உருவைப் பார்த்து வா.

—: o :—

2. நாயன்மார்கள் காலச் சென்னை

மயிலாப்பூர் என்ற பெயர் அவ்வூருக்கு வழங்கி வருவதற்கு ஒரு கதையுண்டு. ஒரு காலத்தில் பார்வதி அம்மையார் மயில் வேடம்கொண்டு இங்கு வந்து சிவபெருமானைக் குறித்துத் தவம் புரிந்தாராம். ஆதலால் இவ்வூருக்கு மயிலாப்பூர் என்று பெயர் வந்தது என்பர். பார்வதி தேவிக்கு அருளிய சிவபெருமானே இங்குக் கபாலீசுவரராகப் பூசிக்கப்படுகிறார். கபாலீசுவரர்



மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவில்

ஆலயம் மிகவும் அழகியது ; புகழ் பெற்றது. இதன் கோபுரம் சில ஆண்டுகளுக்கு முன் புதுப்பிக்கப்பட்டது. நாயன்மார்கள் என்ற சிவபக்தர்களில் முக்கியமான அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்பவர்கள் கபாலீசுவரரைத் தமது தேவாரப் பாடல்களில் புகழ்ந்திருக்கிறார்கள். இங்குள்ள அம்மனின் பெயர் கற்பகாம்பாள். ஆதியில் இக்கோயிலை ஏற்படுத்தியவர் வாயிலார் நாயனர் என்பவராவார். இவருக்குத் தனியாக ஒரு கோயில் கபாலீசுவரர் கோயிலுக்குள் உள்ளது.

மயிலாப்பூரில் ஒரு காலத்தில் சிவநேசச் செட்டியார் என்ற ஒரு பக்தர் வாழ்ந்தார். இவரது பெண் பூம்பாவை என்பவள் பாம்பு கடித்து இறந்துவிட்டாள். அவள் எலும்பை ஒரு குடத்தில் இட்டு வைத்திருந்தார். பின்னர் இவ்வூருக்கு வந்த திருஞானசம்பந்தர் என்ற சைவப் பெரியார் ஒரு பதிகம் பாடி எலும்பை மறுபடியும் பெண்ணுக மாற்றினுர் என்று கூறப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டினும் 63 நாயன்மார்களுக்கும் ஒரு திருவிழா இவ்வூரில் சிறப்பாக நடைபெறுகிறது. அன்று கபாலீசுவரர் கோயிலிலிருந்து 63 நாயன்மார்களின் விக்கிரகங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். அதைக் காண மக்கள் ஆயிரக் கணக்கில் கூடுவார்கள். இக்கோவிலின் மேற்புறமாக அமைந்துள்ள தெப்பக்குளம் மிகவும் அழகானது.

விளுக்கள்

1. மயிலாப்பூர் என்று பெயர் வரக் காரணம் என்ன ?
2. கபாலீசுவரர் கோயிலைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு.

3. பூம்பாவை என்பவள் யார்? அவள் எவ்வாறு இறந்தாள்?
4. பூம்பாவை மறுபடியும் பெண்ணுக மாறியது எப்படி?
5. மயிலாப்பூரில் எத்திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது?

பயிற்சி: 1. மயிலாப்பூரில் பாடப்பட்ட தேவாரப்பாடல் ஒன்றைக் கேட்டுத் தெரிந்துகொள். 2. திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணுக்கிய நிகழ்ச்சியை நாடகமாக நடித்துக் காட்டு.

—: o :—

3. ஆழ்வார்கள் காலச் சென்னை

சங்க கால அரசர்களுக்குப்பின் தமிழ் நாடு பல்லவர்கள் என்ற அரச வமிசத்தார்களால் ஆளப்பட்டது. சிம்மவிஷ்ணு என்ற பல்லவ அரசர் தமது அரசைத் தமிழ் நாட்டில் பரப்பினுர். பல்லவ அரசர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு கி. பி. 9ஆம் நூற்றுண்டுவரை ஆட்சி புரிந்தார்கள். பல்லவர்களின் ஆட்சியில் இலக்கியம், இசை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் மிகவும் வளர்ந்தன. இவர்கள் ஆண்ட காலத்தில்தான் ஆழ்வார்கள் என்று கூறப்படும் வைணவப் பெரியார்களும், நாயன்மார்கள் என்று கூறப்படும் சைவப் பெரியார்களும் தமது உருக்கமான பாக்களால் மக்களிடம் பக்தி நெறியைப் பரப்பினர்.

ஆழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார் மயிலாப்பூரில் அவதரித்ததாகச் சொல்லப்படுகிறது. சென்னையில் திருவல்லிக்கேணி என்று ஒரு பகுதி இருப்பதை

அறிவீர்கள். இதுவும் மிகப் பழமை வாய்ந்த இடமாகும். இதில் பார்த்தசாரதி ஆலயம் என்ற ஒரு பழம் பெரும் கோயில் இருக்கிறது. பாரதப் போரில் அர்ச்சுனனுக்குத் தேர் ஓட்டிய சாரதியின் உருவமாகத் திருமால் இங்கு வழிபடப் படுகிறார். இங்குள்ள பார்த்தசாரதியின் விக்கிரகத்தின்மீது பல அம்புக் காயத் தழும்புகள் உள்ளன என்று கூறுகிறார்கள். இக் கோயிலின் மகிமையைப் பல ஆழ்வார்கள் பாடி உள்ளனர். ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் இக்கோயிலைப்பற்றிக் கூறியுள்ளார். அதிலிருந்து இக்கோயில் அவர் காலத்திற்கு மிகவும் முந்தியது எனத் தெரிகிறது. பல்லவ அரசர்களில் ஒருவரான தந்திவர்மன் என்பவர் இக்கோயிலின் நிர்வாகத்தைச் சீர் செய்ததாக அவருடைய கல்வெட்டு கூறுகின்றது. கோயிலுக்கு முன்னால் இருக்கும் தெப்பக் குளத்தில் அல்லிப் பூக்கள் மலர்ந்திருந்ததால் இவ்வூருக்குத் திருவல்லிக்கேணி அதாவது அழகிய அல்லி மலர்கள் கொண்ட குளம் என்ற பெயர் ஏற்பட்டதாம்.

வினாக்கள்

1. பல்லவர்கள் காலத்தில் பக்தி நெறியைப் பரப்பியவர்கள் யாவர்?
2. மயிலாப்பூரில் அவதரித்த ஆழ்வார் யார்?
3. திருவல்லிக்கேணி என்று பெயர் வரக் காரணம் என்ன?
4. பார்த்தசாரதி ஆலயத்தைப்பற்றி மூன்று வாக்கியங்கள் கூறு.
5. தந்திவர்மனைப்பற்றிக் கல்வெட்டு கூறுவதென்ன?

பயிற்சி: *1.* பன்னிரு ஆழ்வார்கள் யாவர் எனக்கேட்டு அறிந்துகொள். *2.* திருவல்லிக்கேணி குளம், பார்த்தசாரதி ஆலயப் படங்களைச் சேகரித்து ஒட்டுப் படப் புத்தகத்தில் ஒட்டிவை.

—: o :—

4. பல்லவர் காலச் சென்னை

பல்லவர் ஆட்சிக் காலத்தில் சென்னை ஒரு சிற்றூராக இருந்திருக்க வேண்டும். இது கடற்கரையில் இருப்பதால் மீன் பிடிப்பவர் இங்கு வாழ்ந்து வந்தார்கள். சென்னையைச் சுற்றியுள்ள பக்கங்களில் பல சிற்றூர்கள் இருந்தன. அவைகளில் மக்கள் பொதுவாகப் பயிர்த்தொழில் செய்து வந்தனர்.

பல்லவ அரசர்கள் பாண்டிய மன்னர்களுடன் நீண்ட காலம் போராடி வந்ததால் இருதரப்பாரின் வலிமையும் குன்றியது.

இதனல் பல்லவரின் ஆதிக்கம் மறைந்தது. பாண்டியர்களின் வலிமையும் குறைந்தது. ஆகவே, தமிழ் நாட்டில் சோழ அரசர்களின் ஆதிக்கம் ஆரம்பித்தது.

வினக்கள்

1. பல்லவர் காலத்தில் சென்னை எவ்வாறு இருந்தது?
2. பல்லவர் காலத்தில் சென்னை மக்கள் எத் தொழில்களைச் செய்தனர்?
3. பல்லவர் ஆதிக்கம் குறையக் காரணம் என்ன?

பயிற்சி : சென்னை நகரில் எவ்வெப்பகுதியில் மீனவர்கள் வாழ்கிறார்கள், எப்படி வாழ்கிறார்கள் என நேரிற் சென்று கண்டறி.

—: o :—

5. சோழர் காலச் சென்னை

கி. பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து சோழ அரசர்கள் வலிமை பெற்றனர். பராந்தகர் என்ற சோழ அரசரின் இராச்சியம் வடக்கே காளஹஸ்தியில் இருந்து தெற்கே புதுக்கோட்டைவரை பரவியிருந்தது. கி. பி. 985 முதல் 1016 வரை ஆண்ட முதல் இராஜராஜ சோழரும், இவரது குமாரர் முதல் இராஜேந்திர சோழரும் இராச்சியத்தை இன்னும் அதிகமாக விஸ்தரித்தனர். இந்தச் சோழப் பேரரசு கி. பி. 12ஆம் நூற்றாண்டுவரை வலிவுடன் விளங்கியது. பராந்தகர்க்கு முன் வந்த ஆதித்தர் என்ற சோழ அரசரின் காலத்திலேயே தொண்டை மண்டலம் சோழர் கைவசம் வந்தது. ஆகையால் சோழ சாம்ராஜ்யம் மறையும் வரை சென்னை சோழர் ஆட்சியில் அடங்கி இருந்தது.

சோழ அரசர்கள் நாட்டில் உள்ள கோயில்களை நன்கு கவனித்தனர். கோயில்களில் தேவாரம், ஆழ்வார் பாடல்கள், வேத மந்திரங்கள் யாவும் முழங்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. வியாபாரமும் பல வணிகச் சங்கங்களால் வளர்க்கப்பட்டது. சோழர்கள் காலத்தில் வடமொழியிலும் தமிழிலும் இலக்கியம் வளர்ந்தது. பல புதிய கோயில்கள் கட்

டப்பட்டதைத் தவிர, சிற்பம் ஓவியம் முதலிய கலை களும் வளர்ச்சியடைந்தன. சோழர் ஆட்சியில் சென்னை மிகவும் சிறிய ஊராக இருந்திருக்க வேண் டும். ஆகையால், அதைப்பற்றித் தனிப்பட்ட விவரம் ஒன்றும் கிடைக்கவில்லை.

வினுக்கள்

1. பராந்தகர் காலத்தில் சோழ இராச்சியம் எதுவரை பரவியிருந்தது?
2. சோழ அரசர்களில் சிறந்த இருவர் யார்?
3. சென்னை யார் காலத்தில் சோழர் வசமாயிற்று?
4. சோழ மன்னர்கள் செய்த நற்செயல்களைக் கூறு.

பயிற்சி: 1. தென்னிந்தியாவின் படம் வரைந்து அதில் பராந்தகர் காலச் சோழ இராச்சியத்தின் எல்லைகளைக் குறி. 2. தொண்டை மண்டலத்தையும் குறித்துக் காட்டு.

—: o :—

6. பாண்டியர் காலச் சென்னை

கி. பி. 13ஆம் நூற்றுண்டில் சோழ அரசர்கள் வலுவிழந்தனர். பாண்டியர்கள் மறுபடியும் தலைதூக் கினுர்கள். ஆனுல் கி. பி. 14ஆம் நூற்றுண்டில் பாண்டி யரின் வலிமை குறைந்தது. பாண்டிய அரச வமிசத் தில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. அச்சமயம் டில்லியில் முகமதிய சுல்தான்கள் தமது ஆட்சியை ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்களில் ஒருவரான அல்லாவுதீன் கில்ஜி (1296-1316) என்பவரால் அனுப் பப்பட்ட மாலிக்காபூர் என்ற தளபதி பாண்டிய

அரசைக் கவிழ்த்தார். இதன்பின் தென்னிந்தியாவில் குழப்பமான நிலைமையாக இருந்தது.

விஞக்கள்

1. சோழர்கள் எந்த நூற்றுண்டில் வலுவிழந்தனர்? ஏன்?
2. பாண்டியர் ஆட்சி 14ஆம் நூற்றுண்டில் வலிவு குறையக் காரணம் என்ன?
3. மாலிக்காபூர் யார்? அவரது செயலைத் தெரிவி.

பயிற்சி: 1. அல்லாவுதீன் கில்ஜி, மாலிக்காபூர் இவர்களுடைய வரலாறுகளைக் கேட்டுத் தெரிந்து கொள். 2. மாலிக்காபூர் எவ்விதம் பாண்டிய அரசைக் கவிழ்த்தார் என்று கேட்டு அறி.

—: o :—

7. விஜயநகராட்சியில் சென்னை

14ஆம் நூற்றுண்டில் விஜயநகரத்தில் ஓர் இந்து சாம்ராஜ்யம் தோன்றியது. இந்த நூற்றுண்டு முடிவதற்குள் விஜயநகர சாம்ராஜ்யம் தென்னிந்தியா முழுவதும் பரவியது. சென்னை உள்படத் தொண்டை மண்டலம் விஜய நகரத்தரசர் ஆட்சியின்கீழ் வந்தது. விஜயநகர அரசர்கள் மிகவும் திறமையாக ஆண்டார்கள். விஜயநகர அரசர்களுள் மிகவும் புகழுடன் ஆண்டவர் கிருஷ்ணதேவ ராயர் (1509-1530). ராயர் சிறந்த போர் வீரர் மட்டுமல்லர்; அரசியலில் பெரிய மேதையுமாவார். இவர் பல கவிஞர்களை ஆதரித்தார். தாமே பல சிறந்த நாடகங்களையும் வேறு சில நூல்களையும் எழுதியிருக்கிருர். இவர் காலத்தில் தமிழ் நாட்டுக்

கோயில்களுக்கெல்லாம் மானியங்கள் வழங்கப்பட்டன. விஜயநகர அரசுக்கு வடக்கே பாமினி இராச்சியம் என்ளெரு முகமதிய இராச்சியம் தோன்றியது. இந்தப் பாமினி இராச்சியம் நாளடைவில் சிதைவுற்று பீஜப்பூர், பீடார், பீரார், அகமத்நகர், கோல்கொண்டா என்ற ஐந்து இராச்சியங்களாகப் பிரிந்து விட்டது. விஜயநகர மன்னர்கள் பாமினி அரசர்களுடன் அடிக்கடி போரிட்டு வந்தனர். கடைசியில் இந்த முஸ்லீம் அரசுகள் ஒன்றுகூடி விஜயநகரப்படைகளைத் தலைக்கோட்டை என்ற இடத்தில் (1565இல்) தோற்கடித்தன. விஜயநகர அரசர்களின் பலம் குன்றியது. தற்பொழுதைய சென்னை இருக்கும் பகுதியை அப்பொழுது விஜயநகர அரசினுடைய அதிகாரத்தின்கீழ் இருந்த ஒரு தலைவன் கைக் கொண்டிருந்தான். இச்சமயம் தான் ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்படலாயிற்று.

வினாக்கள்

1. விஜயநகர இராச்சியம் எப்போது தோன்றியது? தெற்கே எதுவரை பரவியிருந்தது?
2. விஜயநகர மன்னர்களில் சிறந்தவர் யார்? அவருடைய பெருமைகளைத் தெரிவி.
3. பாமினி இராச்சியம் எவ்வளவு பிரிவாகப் பிரிந்தது?
4. தலைக்கோட்டைச் சண்டை எப்போது நடந்தது? அதன் விளைவு யாது?

பயிற்சி: 1. கிருஷ்ணதேவ ராயரின் படத்தை உன் ஒட்டுப் படப் புத்தகத்தில் ஒட்டிவை. 2. தென்னிந்தியா படத்தில் விஜயநகர இராச்சியம், பாமினி இராச்சியங்களைக் குறி.

—: o :—

8. சென்னையும் போர்த்துகீசியரும்

அக்காலத்தில் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் வந்தனர். இவர்களைப்போலவே மற்ற ஐரோப்பியத் தேசத்தவர்களாகிய போர்த்துகீசியர்களும், டச்சுக்காரர்களும், பின்னர் பிரெஞ்சுக்காரர்களும் வியாபார நிமித்தம் இந்தியாவில் குடியேறினர்கள். போர்த்துகீசியர்கள் ஆங்கிலேயர் வருவதற்கு முன்பே நமது நாட்டில் பல இடங்களில் குடி புகுந்தனர். மயிலாப்பூருக்குக் கிழக்கே உள்ள சாந்தோம் என்ற பகுதியில் 1552ஆம் வருடம் போர்த்துகீசியர் குடியேறி அங்கு ஒரு கோட்டையைக் கட்டினர்கள். இவ்விடத்தில்தான் பல நூற்றுண்டுகளுக்குமுன் செயின்ட் தாமஸ் என்ற கிறிஸ்தவ ஞானியார் வந்து தமது மதத்தைப் பிரசாரம் செய்தார் என்று சொல்கிருர்கள். இவர் சிலகாலம் இங்குத் தங்கியதால் இவ்வூருக்குச் சாந்தோம் என்ற பெயர் வந்ததாம். இவருடைய பெயரைக் கொண்டே சென்னைக்கு அருகில் உள்ள பறங்கிமலை செயின்ட் தாமஸ் மவுண்ட் என அழைக்கப் படுகிறது.

வினக்கள்

1. வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்கள் யாவர்?
2. போர்த்துகீசியர் சென்னையில் எப்பகுதியில் குடியேறினர்?
3. சாந்தோம் எனப் பெயர் வரக் காரணம் என்ன?
4. பறங்கிமலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

பயிற்சி : *1. மயிலாப்பூரிலுள்ள சாந்தோம் பகுதிக்குச் சென்று அங்குள்ள போர்த்துகீசியர் காலக் கட்டிடங்களைப் பார்த்து வா. 2. மவுண்ட்ரோடு என்று பெயர் ஏற்பட்ட காரணத்தை ஊகித்து அறிந்துகொள்.*

—: o :—

9. சென்னை-மதராஸ் பெயர்க் காரணங்கள்

ஆங்கிலேயர்கள் "டே" என்ற ஒரு வர்த்தகரின் தலைமையில் கூவம் நதியின் முகத்துவாரத்தின் வடக்கில் உள்ள ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அதைத் தமது வியாபாரத்தலமாக ஆக்கிக் கொள்ள எண்ணினர்கள். அச்சமயத்தில் பழவேற்காடு முதல் சாந்தோம்வரை இருந்த கடற்கரை விஜயநகர மன்னனின் பிரதிநிதியாக இருந்த வேங்கடபதி நாயக்கரிடம் இருந்தது. அவரது தலைநகரம் வடஆற்காடு ஜில்லாவில் உள்ள வந்தவாசி. அவருடைய சகோதரரான ஐயப்ப நாயக்கர் சென்னைக்கருகே உள்ள பூந்தமல்லி என்ற இடத்தில் வசித்தார். "டே" இவருடன் நட்புப் பாராட்டித் தம்முடைய கோரிக்கையைத் தெரிவித்தார். ஐயப்ப நாயக்கர் உதவி கொண்டு ஆங்கிலேயர் வேங்கடபதி நாயக்கரிடம் இருந்து இப் பகுதியைக் குறைந்த விலைக்கு 1639ஆம் வருடம் வாங்கினர். வேங்கடபதியும் ஐயப்ப நாயக்கரும் தங்கள் தகப்பனரான சென்னப்ப நாயக்கர் பெயரால் இப்பகுதி அழைக்கப்படவேண்டும் என விரும்பினர். ஆகவே முதலில் இது 'சென்னப்ப நாயக்கன் பட்டினம்' என அழைக்கப் பட்டது. பின்பு நாளடைவில் இது சென்னைப் பட்டினம் என அழைக்கப்பட்டது. இங்கு "டே" ஒரு

கோட்டை அமைத்துக் கொள்ளவும் அனுமதி பெற்ருர். இந்தக் கோட்டைக்குச் செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்ற பெயர் இடப்பட்டது. கோட்டைக்கு நடுவில் உள்ள பண்டகசாலையில் ஆங்கிலேய வர்த்த கர்கள் யாவரும் தங்கள் சரக்குகளுடன் வசித்து வந்தார்கள்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வடக்கே அதன் பாதுகாப்பை விரும்பி இந்து மதத்தவர் பலர் குடியேறி னர். இந்தப் பிரதேசத்திற்கு மதராஸ் பட்டினம் என்று பெயர் வந்தது. இதற்குப் பல காரணங்களைச் சொல்லுகிருர்கள்.

கோட்டைக்கருகில் ஒரு மீனவர் சேரி இருந்த தாம். அந்தச் சேரிக்கு மதரசன் என்னும் கிறிஸ்தவர் தலைவராக இருந்தாராம். அவர் பட்டணத்தைத் தம் பெயரால் அழைக்கும்படி ஆங்கிலேயரை வேண்டிக் கொண்டதன் பயனுக மதராஸ் என்ற பெயர் வந்ததாம். சிலர் வேறு ஒரு காரணத்தையும் கூறுகின்றனர். மதராஸ் என்ற பெயர்கொண்ட போர்த்துகீசிய வணி கன் சாந்தோமில், பிரபலமாக வாழ்ந்து வந்தான். அவனுடைய பெயரே பின் இப்பட்டினத்துக்கு இடப் பட்டது என்கிருர்கள். நாளடைவில் சென்னைப் பட்டினம் அல்லது மதராஸ் என்று இரு பெயர்களுமே வழங்கலாயின.

வினுக்கள்

1. ஆங்கிலேயர்களின் எண்ணம் யாது?
2. ஐயப்ப நாயக்கர் என்பவர் யார்? அவர் எங்கு வசித்தார்?

3. டே என்பவர் யார்? சென்னைப் பகுதியை வாங்க இவர் எவ்வாறு உதவினார்?
4. சென்னைப் பட்டினம் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது?
5. சென்னையிலுள்ள கோட்டையின் பெயர் யாது?
6. மதராஸ் பட்டினம் என்று முதன் முதல் எப்பகுதி அழைக்கப்பட்டது?
7. மதராஸ் என்று பெயர் வரக் கூறப்படும் காரணங்கள் யாவை?

பயிற்சி : 1. சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குச் சென்று அதைப் பார்வையிடல். 2. அதன் அமைப்புகளை நேரிற்கண்டு மகிழ்தல். 3. செயின்ட் ஜார்ஜ் கோட்டைப் பகுதிகளின் படங்களைச் சேகரித்து ஒட்டுப் படப் புத்தகத்தில் ஒட்டிவை.

—:o:—

10. சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை

ஆங்கிலேயர் கி. பி. 1640 மார்ச் மாதம் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்ட ஆரம்பித்தார்கள். இதைச் சென்னைக் கடற்கரை ஓரத்தில் நீங்கள் காணலாம். இதைச் சுற்றி ஓர் அகழி இருக்கிறது. இக்கோட்டை சதுர வடிவமாகவும், நான்கு மூலைகளிலும் கொத்தளங்களுடனும், நடுவில் பண்டகசாலையுடனும் கட்டப்பட்டது. முதலில் கொத்தளங்களும் பின்னர் அவைகளை இணைக்கும் மதிற் சுவர்களும் கட்டப்பட்டன. கோட்டை முழுவதும் கட்டி முடிக்கப் பதினான்கு ஆண்டுகள் பிடித்தன. கோட்டையின் தெற்கு வடக்கு நீளம் 90 மீட்டர் ; கிழக்கு மேற்கு

நீளம் 72 மீட்டர். பின்பு இதற்குத் தெற்கேயும் வடக்கேயும் வீதிகளும் வீடுகளும் கட்டப்பட்டன. இக் கோட்டைக்குள் கட்டப்பட்ட கட்டிடங்களில் மிகப் பழமையானது செயின்ட்மேரி தேவாலயம். இந்தக் கோயிலுக்குப் பக்கத்தில் பல ஐரோப்பியர்களின் சமாதிகள் இருக்கின்றன. இங்குப் பல பிரசித்தி பெற்ற ஆங்கிலேயர்கள் அடக்கம் செய்யப்பட்டு இருக் கிருர்கள். அப்பகுதியே வெள்ளேயர் பட்டணம் என அழைக்கப்பட்டது.

ஆங்கிலேயருடன் வியாபாரம் செய்யப் பல இந்திய வியாபாரிகள் முற்பட்டனர். அவர்கள் வெள்ளேயர் பட்டணத்திற்கு அப்பால் தங்கினர். நாளடைவில் அங்குப் பல வீடுகளும் வீதிகளும் ஏற்பட்டன. இப் பகுதியை ஆங்கில வியாபாரிகள் கறுப்பர் பட்டணம் என அழைத்தனர்.

ஆங்கிலேயர் துணி வியாபாரத்தில் ஈடுபட்டதால் பல நெசவாளிகள் அவர்களுக்குத் தேவையாயிருந்த னர். முதல் ஆண்டிற்குள்ளாகவே சுமார் நானூறுக் கும் மேற்பட்ட நெசவாளிக் குடும்பங்கள் இங்கு வந்து வசிக்கலாயின.

கி. பி. 1652இல் சென்னேக் கோட்டைப் பிரதேசம் ஒரு மாகாணமாயிற்று. அதன் தலேவர் பிரெசிடென்ட் என அழைக்கப்பட்டார். இதற்குச் சில காலத்திற்குப் பின்பே அவர் கவர்னர் என்ற பெயர் பெற்ருர்.

சென்னேக் கோட்டை அடிக்கடி பகை அரசர் களால் தாக்கப் பட்டதால் அதன் கோட்டைச் சுவர்கள் பெரிதாக்கப்பட்டன. கறுப்பர் பட்டணத்திற்குப் பாது

காப்பாகத் தெற்கு வடக்குச் சுவர் 6 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கட்டப்பட்டது. மேற்குச் சுவரில் பல வழிகள் அமைக்கப்பட்டன. அவைகளில் ஒன்றுதான் யானைக்கவுனி என்பது. கோட்டையைப் பெரிதாக்கும் வேலை கி.பி. 1783இல் முடிவுற்றது. நகரக் காவலுக்குக் கொத்தவால் என்ற அதிகாரியின்கீழ் ஒரு காவல் படையினர் ஏற்பட்டனர். அவர்கள் தங்கிய பகுதி தான் கொத்தவால்சாவடி எனப்படுகிறது. இது தற் பொழுது சென்னை நகரின் பெரிய சந்தையிடமாக விளங்குகிறது. கறுப்பர் பட்டணம் என்ற பகுதி இங்கி லாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் என்பவர் பெயரால் தற்காலத்தில் ஜார்ஜ் டவுன் என்று அழைக்கப் படுகிறது.

வினாக்கள்

1. செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் அமைப்பைப் பற்றிக் கூறு.
2. வெள்ளையர் பட்டணம், கறுப்பர் பட்டணம் என எவை அழைக்கப்பட்டன?
3. சிறு குறிப்பு கூறு :—கொத்தவால் சாவடி, யானைக் கவுனி, ஜார்ஜ் டவுன்.

பயிற்சி : சென்னை மாவட்டப் படத்தில் கீழ்க்கண்டவை களைக் குறி : ஜார்ஜ் டவுன், செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சாந்தோம்.


—: o :—

11. சென்னை—மாநகர் ஆதல்

சென்னைக் கோட்டைக்குத் தெற்குப் பகுதியிலுள்ள சாந்தோமில் போர்த்துகீசியர்கள் தங்கியிருந்தனர் என ஏற்கனவே கண்டோம். நாளடைவில் ஆங்கிலேயர் போர்த்துகீசியரிடமிருந்து சாந்தோமைக் கைப்பற்றினர்.

சிறிது காலம் கர்நாடக நவாபின் ஆட்சியின்கீழ் இருந்த மைலாப்பூரையும் பின்னர் ஆங்கிலேயர்கள் கி. பி. 1749இல் கைப்பற்றிக் கொண்டனர்.

கர்நாடகத்தில் மொகலாயர் ஆட்சி பரவ ஆரம்பித்ததும் மொகலாயர்களின் கர்நாடகப் பிரதேசப் பிரதிநிதியான சுல்பிகர்கான் என்பவரிடமிருந்து ஆங்கிலேயர் எழும்பூர், புரசைவாக்கம், தண்டையார் பேட்டை ஆகியவற்றைக் குத்தகைக்கு எடுத்தனர். பின்னர் கி. பி. 1720இல் இவை ஆங்கிலேயரால் சேர்த்துக் கொள்ளப்பட்டன. திருவல்லிக்கேணியை முதலில் ஆங்கிலக் கம்பனியார் வருடமொன்றுக்கு ஐம்பது பக்கோடாக்கள் என்ற நாணயங்களுக்குக் குத்தகைக்கு எடுத்து இருந்தனர். பின்னர் இதையும் தங்கள் பகுதியுடன் சேர்த்துக் கொண்டனர். ஒரு மொகலாயப் பிரதிநிதியிடமிருந்து திருவொற்றியூர், கத்தியவாக்கம், நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, சாத்தான்காடு ஆகிய ஐந்து கிராமங்களையும் கி. பி. 1708இல் பெற்றனர். எழும்பூருக்கும், புரசைவாக்கத்திற்கும் இடையில் அமைந்துள்ள பெரியமேடு, வேப்பேரி என்ற இடங்களை ஆங்கிலக் கம்பெனியார் கி. பி. 1742இல் அடைந்தனர். இதன் பின்னர், கர்நாடக நவா



1. துறைமுகம் 2. உயர்நீதி மன்றம் 3. செயின்ட் ஜார்ஜ் கோட்டை 4. ஜெனரல் ஆஸ்பத்திரி 5, மிருகக்காட்சிசாலை 6. சென்ட்ரல் இரயில் நிலையம் 7. எழும்பூர் இரயில் நிலையம் 8. மியூசியம் 9. பெரிய மசூதி 10. சென்னை கிரிகெட் கிளப், சேப்பாக்சம் 11. செனட்டு சபை 12. சேப்பாக்கம் அரண்மனை 13. பிரஸிடென்ஸி கல்லூரி 14. பார்த்தசாரதி கோயில் 15. இராணி மேரி கல்லூரி 16. சான்தோம் மாதாகோயில் 17. மயிலை கபாலீசுவரர் கோயில் 18. கலாக்ஷேத்திரம் 19. ஒய். எம். ஸி. ஏ. காலேஜ் 20. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி 21. அகில இந்திய ரேடியோ நிலையம் 22. கூவம் ஆறு 23. அடையாறு

பிடமிருந்து ஆற்காட்டு ரூபாய் நாணயங்கள், பக்கோடா நாணயங்கள் வெளியிடும் உரிமையுடன் பெரம்பூர், புதுப்பாக்கம், சடையன் குப்பம் ஆகிய பகுதிகளும் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தன. காலெட் என்னும் ஆங்கில அதிகாரி கம்பெனியின் துணி வியாபாரத்திற்காகப் பல நெசவுக்காரர்களை வடக்கே ஒரு கிராமத்தில் குடியேற்றினர். அவர் நினைவாக அழைக்கப்பட்ட காலெட்பேட்டை இப்பொழுது காலடிப்பேட்டை என வழங்குகிறது. சிந்தாதிரிப்பேட்டையும் நெசவுத் தொழிலாளர்களின் கிராமமாகவே இருந்தது. இவ்வாறு ஆங்கிலக் கம்பெனியார் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டதோடு சென்னை நகரையும் அநேகமாகத் தற்போதுள்ள அளவிற்கு வளரும்படி செய்தனர்.

வினுக்கள்

1. சுல்பிகர்கான் என்பவர் யார்? அவரிடமிருந்து எவ்விடங்களை ஆங்கிலேயர் குத்தகைக்கு வாங்கினர்?
2. திருவல்லிக்கேணியை ஆங்கிலேயர் எங்ஙனம் சேர்த்துக் கொண்டனர்?
3. காலடிப்பேட்டை எனப்பெயர் வந்த காரணத்தைத் தெரிவி?
4. கர்நாடக நவாப் மூலம் ஆங்கிலேயர் பெற்ற இடங்கள் எவை?

பயிற்சி: கீழ்வரும் ஊர்களின் பெயர்கள் எவ்வாறு உண்டாயின என்பதைக் கேட்டறி: பல்லாவரம், அடையாறு, சௌகார்பேட்டை, வடபழனி.

—: o :—

12. சென்னையும் - போர்களும்

சென்னையில் ஆங்கிலக் கம்பனியார் தங்கள் வியாபாரக் கிடங்கை அமைத்துக்கொண்டதுபோல், பிரெஞ்சுக்காரர்களும் சென்னைக்குத் தெற்கே தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள புதுச்சேரியில் தங்கள் தலைமைக் காரியாலயத்தை அமைத்துக்கொண்டனர். பிரெஞ்சுக்காரர்களின் கவர்னரான டூப்ளே என்பவர் ஆங்கிலேயர்களைக் கர்நாடகத்திலிருந்து துரத்திவிடவேண்டுமென்று எண்ணினர். அதனால் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் பல போர்கள் நேரிட்டன. இப்போர்களைப் பொதுவாகக் "கர்நாடகப் போர்கள்" எனக் கூறுகிறார்கள்.

கி. பி. 1746இல் லாபோர்டானே என்னும் பிரெஞ்சுத் தளகர்த்தர் ஒரு படையுடன் சென்னையைத் தாக்கி அதைப் பிடித்துக்கொண்டார். ஆங்கிலேயர்கள் இதுபற்றிக் கர்நாடக நவாபிடம் முறையிட்டனர். நவாப் சென்னையை விடுவிக்க ஆங்கிலேயருக்கு உதவியாக ஒரு படையை அனுப்பினர். ஆனல் அப்படையைப் பிரெஞ்சுக்காரர்கள் முறியடித்து விட்டனர். இதன் பின்னர் கி. பி. 1749இல் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் சமாதானம் ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின்படி சென்னை ஆங்கிலேயர்களுக்குத் திருப்பித் தரப்பட்டது. மீண்டும் இருவருக்கும் ஏற்பட்ட போரில் லாலி என்னும் பிரெஞ்சுத் தளகர்த்தர் கி. பி. 1758இல் சென்னையைப் பிடிக்க எண்ணி ஒரு பெரும் படையுடன் முற்றுகையிட்டார். ஆயினும் சென்னையை அவரால் கைப்பற்ற முடியவில்லை. அதனல் அவர் கறுப்பர் பட்டணத்தைப் பிடித்துக்

கொண்டு சேப்பாக்கம் முதலிய சில பகுதிகளைத் தீயிட்டு அழித்தார். சென்னைக் கோட்டையை முற்று கையிட்டு அதனைப் பெருஞ் சேதமடையச் செய்தார்.

கர்நாடக நவாபாயிருந்த மகமது அலிக்கும் மைசூரை ஆண்ட ஐதர் அலிக்கும் பகை ஏற்பட்டிருந்தது. ஆங்கிலேயர்கள் மகமது அலியை ஆதரித்ததால் ஐதர் அலி ஆங்கிலேயருடன் போர் தொடுத்தார்.

ஐதர் அலி கர்நாடகத்தின்மீது படை எடுத்து வந்து திடீரென்று சென்னையைத் தாக்கினர். ஆங்கிலேயரிடம் போதிய படைபலமில்லாமையால் ஐதருடன் சமாதானம் செய்துகொண்டனர். அதன்படி ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்வதாக ஏற்பாடாயிற்று. ஆனல், மீண்டும் போர் நேரிட்டது. ஐதர் முன்போலவே கர்நாடகத்தின்மீது படையெடுத்தார். ஆங்கிலேயர்கள் அவரை வந்தவாசி, சோளிங்கர் முதலிய இடங்களில் தோற்கடித்தார்கள். ஐதர் கி. பி. 1782இல் காலமானர். அவருடைய மகனாகிய திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களால் 1799இல் சீரங்கப் பட்டணம் முற்றுகையில் கொல்லப்பட்டார். திப்புவின் மறைவிற்குப்பின் ஆங்கிலேயர்களுக்குக் கர்நாடகத்தில் ஆதிக்கம் நிலைபெற்றது.

கர்நாடக நவாப் பதவிக்கு ஏற்பட்ட போட்டியில் ஆங்கிலேயர்களின் உதவியால் நவாப் பட்டம் பெற்ற மகமது அலி ஆங்கிலேயர்களுக்குப் பலவித சலுகைகள் அளித்தார். ஆங்கிலேயர்களும் நவாபிற்குப் பல முறை தங்கள் படைகளைக் கொடுத்து உதவி செய்தனர். வரி கொடாத பாளையக்காரர்களை அடக்கி வரி

வசூலிக்கவும் ஆங்கிலேயர்கள் அடிக்கடி உதவிசெய்து வந்தனர். இவற்ருல் படையினர் செலவிற்காக நவாப் பெரும் தொகை ஆங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டியதாக இருந்தது. மகமது அலிக்குப்பின் நவாப் பட்டத்திற்கு வந்த உம்தல்-உம்-உமாரா என்பவரை ஆங்கிலேயர்கள் மூன்று கோடி ரூபாய் தரும்படி கேட்டனர். அவரும் அவ்வாறே ஒப்புக்கொண்டார். எதிர்பாராத விதமாக அவர் இறந்துவிடவே பின் அஸிம்-உல்-உமாரா என்பவரை ஆங்கிலேயர் கர்நாடக நவாபாகச் செய்தனர். கர்நாடகத்தை ஆளும் சிவில், இராணுவ அதிகாரங்களை ஆங்கிலேயர் அவரிடமிருந்து பறித்துக்கொண்டு அவருக்கு உபகாரச் சம்பளமும் கொடுத்தனர். அவரது சந்ததியார்கள் சென்னையில் இராயப்பேட்டையில் உள்ள அமீர் மகல் என்னும் அரண்மனையில் வசித்துவர ஆரம்பித்தனர். நவாபின் பட்டப்பெயர்களுள் ஒன்று வாலாஜா என்பது. இதன் நினைவாக ஆங்கிலேயரின் செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் வாயில் ஒன்று வாலாஜா வாயில் என்று அழைக்கப்படுகிறது. கர்நாடக நவாப் வமிசத்தவர் அமீர்மகல் என்ற மாளிகைக்குப் போகுமுன் சேப்பாக்கத்தில் தற்பொழுது சர்க்கார் கட்டிடமாக இருக்கும் அரண்மனையில் வசித்தனர். அதனுல் இந்த அரண்மனையிலிருந்து மௌண்ட் ரோடுக்குச் செல்லும் சாலை வாலாஜா சாலை என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

வினுக்கள்

1. கர்நாடகப் போர்கள் என்று எவற்றைக் கூறுகிருர்கள் ?

2. ஐதர்அலி ஆங்கிலேயர்களுடன் போர் தொடுக்கக் காரணம் என்ன?
3. கர்நாடகத்தில் ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கம் நிலைபெற்றது எப்பொழுது?
4. கர்நாடக ஆட்சி ஆங்கிலேயர் வசமாகியது எப்பொழுது?

பயிற்சி: ஐதர்அலி, திப்புசுல்தான், டுப்ளே இவர்களுடைய படங்களைச் சேகரித்து ஒட்டிவை. 1. தென்னிந்தியா படத்தில் கர்நாடகப் பகுதியையும், புதுச்சேரி, வந்தவாசி, சிரங்கப்பட்டணம் என்னும் ஊர்களையும் குறிப்பிடு.


—: o :—

13. சென்னை - சில முக்கிய கவர்னர்கள்

கர்நாடக ஆட்சி ஆங்கிலேயர் வசமானபின் சென்னையை ஆள ஆங்கிலேயர்கள் பல உத்தியோகத்தர்களை அனுப்பினார்கள். அவர்களின் தலைவரைக் கவர்னர் என அழைத்தார்கள். சென்னையை ஆண்ட கவர்னர்களில் சிறந்தவர் சிலரைப்பற்றி இங்குக் கவனிப்போம்.

சான்டர்ஸ் (Saunders) என்பவர் மௌண்ட்ரோடு பக்கமுள்ள ஒரு மாளிகையை வாங்கி அதைக் கவர்னரின் வாசத்தலமாக்கினார். 1798இலிருந்து 1803 வரை ஆண்ட கிளைவ் பிரபு இதை விஸ்தரித்துத் தற்பொழுது ராஜாஜி மண்டபம் என அழைக்கப்படும் மண்டபத்தைக் கட்டினார். இவர் பிரசித்தி பெற்ற இராபர்ட் கிளைவின் புதல்வர். இவரே கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையையும் கட்டினார். இந்தியர்

களின் உற்ற நண்பராயிருந்து சேவை செய்த சென்னைக் கவர்னர் தாமஸ் மன்ரோ 1820இலிருந்து 1827 வரை ஆண்டவர். இவரது நினைவாக உருவச்சிலை ஒன்றை, குதிரை மீது சவாரி செய்யும் கோலத்தில் அமைத்து மௌண்ட்ரோடில் வைத்திருப்பதை இப்பொழுதும் நீங்கள் பார்க்கலாம். 1854இலிருந்து 1869 வரை பதவி வகித்த ஹாரிஸ் பிரபுவின் காலத்தில் சென்னை சர்வகலாசாலை உதயமாயிற்று. 1859இலிருந்து



சென்னை சர்வகலாசாலை

1860 வரை ஆண்ட ஸர் சார்ல்ஸ் டிரிவேல்யன் (Charles Trevelyan) காலத்தில் சென்னை மிருகக்காட்சிசாலை அமைக்கப்பட்டது. தற்பொழுது உலகிலேயே மிக அழகுடையதெனக் கருதப்படும் மெரீனா என்னும் கடற்கரைச் சாலையை 1881இலிருந்து 1887 வரை ஆண்ட கிராண்ட் டப் (Grant Duff) என்னும் கவர்னர் ஏற்படுத்தினார்.

கன்னிமரா பிரபுவின் ஆட்சி (1886—1890) யில் கன்னிமரா புத்தகசாலை ஏற்பட்டது. இங்கிலாந்து

அரசியான விக்டோரியா மகாராணியின் 50ஆம் வருட முடிவின் நினைவுச் சின்னமாகப் பொது மண்டபம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது.

வினாக்கள்

1. தற்பொழுதுள்ள ராஜாஜி மண்டபத்தைக் கட்டியவர் யார்?
2. சர் தாமஸ் மன்ரோவின் நினைவுச் சின்னமாகச் சென்னையில் நாம் எதனைக் காணலாம்?
3. சென்னை சர்வகலாசாலை யார் காலத்தில் அமைக்கப் பட்டது?
4. கன்னிமரா பிரபு, கிராண்ட் டப் என்னும் கவர்னர்கள் சென்னையில் அமைத்தவை யாவை?

பயிற்சி: கன்னிமரா புத்தகசாலை, மிருகக் காட்சி சாலை இவ்விடங்கட்கு உல்லாசப் பயணம் சென்று வா. 2. மன்றோ உருவச்சிலை, ராஜாஜி மண்டபம், மெரீனா கடற்கரை இவைகளின் படங்களைச் சேகரித்துவை.

—:o:—

14. சென்னை—நகராண்மைக்கழகம்


கர்நாடகம் ஆங்கிலேயர் வசம் வந்த பின்னர் சென்னை நகரின் முக்கியத்துவம் அதிகரித்தது. ஆங்கிலேயர் தாங்கள் வென்றபல பகுதிகளைச்சேர்த்து சென்னை மாகாணம் என்று பிரித்ததும் சென்னை அம் மாகாணத்தின் தலைநகரமாகியது.

அதற்கு முன்பே சென்னையில் நகராண்மைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலக் கம்பனி அலு

வலரான செல்ட் என்பவர் ஆலோசனைப்படி கி. பி. 1688 செப்டம்பர் 29இல் சென்னை நகராண்மைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று மாலை புதிய மேயரும் ஆல்டர்மென் என்னும் அங்கத்தினர்களும் தங்கள் பதவிக்கேற்ற உடையில் பவனி வந்தனர். இவ்வழக்கம் இப்போது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தில் நடைபெறுகிறது. புதிதாக ஆரம்பிக்கப் பட்ட நகராண்மைக் கழகம் சில சிறு வரிகளை வசூலிக் கும் உரிமை பெற்றது. கி. பி. 1727இல் சென்னை நகராண்மைக்கழகம் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது. அதில் ஒரு மேயரும் ஒன்பது ஆல்டர்மென் என்பவர்களும் இருக்கவேண்டும் என்றும், ஆல்டர் மென் ஒன்பதுபேர்களில் ஏழுபேர் ஆங்கிலேயர்களாக இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆங்கிலேய சர்க்காரால் கி. பி. 1793இல் நிறை வேற்றப்பட்ட ஒரு சட்டப்படி வீட்டுவரி, வேறு சில வரிகள் வசூலாகும் உரிமைகளுக்கும் ஒரு முனிசிபல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கி. பி. 1867இல் ஏற் பட்ட சட்டப்படி சென்னை நகரம் எட்டு வார்டுகள் என்ற பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வார்டிலிருந்தும் நான்கு கமிஷனர்கள் அரசாங்கத்தா ரால் நியமனம் பெற்றனர். இவர்கள் வருடாந்தர வரவு செலவுத் திட்டத்தை (Budget) விவாதித்து மாற்றி அமைக்கும் உரிமை பெற்றனர். பின்னர் படிப்படியாக பல முனிசிபல் சட்டங்கள் செய்யப்பட்டு, சென்னை நகராண்மைக் கழகம் உருவாக்கப்பட்டது.

இப்பொழுது சென்னை நகரசபை அங்கத்தினர்கள் நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். புதிய



சென்னை நகராண்மைக் கழகம்

சட்டப்படி நூறு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். மேயருக்கு விசேஷ உடையும், தங்கச் சங்கிலியும் விருதுத் தடியும் உண்டு. அவர் அமர் வதற்குத் தனியான ஆசனமும் உண்டு.

வினாக்கள்

1. சென்னை நகராண்மைக் கழகம் ஏற்படக் காரணமாக இருந்தவர் யார்?
2. நகராண்மைக் கழகம் எவ்வாண்டில் ஆரம்பிக்கப் பட்டது? எவ்வாண்டில் அங்கீகரிக்கப்பட்டது?
3. ஒவ்வோர் ஆண்டும் நகராண்மைக் கழகத்தில் நவம்பர் மாதத்தில் நடைபெறும் வழக்கத்தைத் தெரிவி.
4. தற்பொழுது சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர்களாக எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர்?

5. மேயர் என்பவர் யார் ? இவருக்குள்ள சிறப்பான அம்சங்கள் யாவை ?

பயிற்சி : 1. சென்னை நகராண்மைக் கழகக் கட்டிடப் படத்தை உன் ஒட்டுப்படப் புத்தகத்தில் ஒட்டிவை. 2. நகராண்மைக் கழகத்துக்குச் சென்று அதன் ஆசன அமைப்புகளைத் தெரிந்து கொள்.

—: o :—

15. சென்னை-சில சான்றோர்கள்

சான்றோர்கள் சிலர் சென்னையில் அருஞ்செயல் புரிந்திருக்கிறார்கள். 1695இல் காலமான ஆலங்காத்த பிள்ளை ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தைக் கட்டினார். 1792இல் காலமான மணலிமுத்துகிருட்டின முதலியார் பழைய ஆலயங்களான சென்னகேசவர், சென்ன மல்லீசுவரர் ஆலயங்களைப் புதுப்பித்துக் கட்டினார். சுங்குராம செட்டியார் பிரபல வர்த்தகத் தலமான கொத்தவால்சாவடியை நிறுவினார். இவர்களைத் தவிர இந்நகரில் வாழ்ந்த தம்புச் செட்டியார், அவதானம் பாப்பையா, பச்சையப்ப முதலியார், பண்ட்லா இராம சாமி நாயக்கர் போன்றவர்களின் சேவையைப் பாராட் டப் பல தெருக்கள் அவர்கள் பெயரில் வழங்கி வரு கின்றன. சுதந்திர இயக்கத்திலும் சென்னை வாசிகள் உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். சேலம் இராமசாமி முதலியார் (1825—1892), தாதாபாய் நௌ ரோஜி, பிரோஸ் ஷா மேதா போன்ற தேசத் தலைவர் களுடன்கூடி அரசியலில் பங்கு எடுத்துக் கொண்டனர். அன்னிபெசன்ட்அம்மையார் (1847—1933) ஆரம்பித்த

இந்தியாவின் சுயஆட்சிச் சங்கத்தின் பிறப்பிடம் மதராஸ் நகரமே. கவர்னர் பென்ட்லாண்டு (Pentland) பிரபுவின் ஆட்சியில் கையாண்ட அடக்குமுறையில் இந்த அம்மையார் சிறையிலிடப்பட்டார். சிறந்த தேசீயத் தலைவரான சத்தியமூர்த்தி நகர பரிபாலன சபையின் தலைவராகச் சேவை செய்கையில் மக்களின் குடிதண்ணீர் வசதிக்காக ஆரம்பிக்கப்பட்ட நீர்த் தேக்கம் 'சத்தியமூர்த்தி சாகரம்' என்ற பெயருடன் பூண்டியில் கட்டப்பட்டிருந்தது.

விஞக்கள்

1. மணலி முத்தகிருட்டின முதலியார் செய்த தொண்டினைத் தெரிவி.
2. சென்னையில் வாழ்ந்து சேவை செய்த பெரியோர்களில் மூவரைக் கூறு.
3. சுதந்திர இயக்கத்தில் சென்னை வாசிகள் பங்கு கொண்டனர் என்பதற்கு ஓர் உதாரணம் கூறு.
4. பூண்டியிலுள்ள நீர்த்தேக்கத்திற்குப் பெயர் யாது? அதற்குப் அப்பெயர் வைக்கப்படக் காரணம் என்ன?

பயிற்சி: 1. பூண்டி நீர்த்தேக்கத்திற்கு உல்லாசப் பயணமாகச் சென்று வருதல் 2. சத்தியமூர்த்தி, அன்னிபெசண்ட் அம்மையார் இவர்களுடைய படங்களைச்சேகரித்து ஒட்டிவை.

—: o :—